"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

சித்திரை - வைகாசி - ஆனி 1999

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00




## 7 DAYS A WEEK, 11.00AM TO 7.00PM.

# JAS Musicals Ltd

108A The Broadway, southall Middx, UB1 1QF, UK.
தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நேரில் வாருங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்

சித்திரை–வைகாசி–ஆனி 1999

ஆசிரியர் : திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகம்: திரு வ. இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு சிவ. அசோகன்
நிர்வாகக்குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. சி. அற்புதானந்தன்
திரு. தர்மலிங்கம்
Dr. N.நவநீதராசா
திரு இ. சிவானந்தராசா
தொடர்பு முகவரி:
42 Stoneleigh Road, Clayhall, Ilford,
Essex IG5 0JD
Tel: 0181 550 4233
Fax: 0181 550 4233

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். கட்டுரைகளை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு. பெயர், முகவரி இல்லாது வரும் கட்டுரைகளோ மற்றும் கடிதங்களோ கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இலங்கையில் தொடர்பு:
Mr. K. Balasubramanium, 131 Sangamitha Mawatha, Colombo 13, Colombo
ஜேர்மனியில் தொடர்பு:
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin, Germany Tel: 030 251 0209
டென்மார்க்கில் தொடர்பு:
Mr R. Rajendran, Bjergmarken 21, St TV 4300 Holbeck Denmark

மதிப்புக்குரிய துன்னையூர் ராம் லோகேஸ்வரக் குருக்கள் அவர் கள் மனமுவந்து இலங் கையில் கலசத்துக்கான பொறுப்புக் களை ஏற்றுக் கொண்டுள்ளார். கட்டுரைகள் அனுப்புவோர் சந்தா தாரராக விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள் ளவும்.

**428 R.A. De Mel. Mawatha,**
**Colombo 3**
**Tel: 576283**

# உள்ளே................


| | |
|---|---|
| சைவ சமயம் | 4 |
| விழிப்புணர்வு | 6 |
| சிவமாதல் | 9 |
| Freedom..... | 13 |
| சிறுவர் கலசம் | 17 |
| கழகம் பெற்ற வாழ்வு | 25 |
| வருங்கால சமுதாயம் | 27 |
| இலக்கியம் காட்டும் | 29 |
| கவிதை உலகம் | 31 |
| கலசம் சஞ்சிகையூடு | 33 |
| கோலாகலமாக | 42 |
| பெண்கள் உலகம் | 44 |
| சிவயோகம்... | 46 |


**கலசம் வாசகர்களுக்கு எமது தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்**









## 25 ஆவது கலச விழாவில் சில காட்சிகள்

மணி 7 ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் ஒலி 26

கலசம்

KALASAM

சித்திரை–வைகாசி–ஆனி 1999

# நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

கலசம் 25 இன் கட்டுரைகள் பலரை சமயம் பற்றிப் பேச வைத்திருக்கின்றன. சைவன் ஒருவன் மாமிசம் சாப்பிடலாமா என்று அங்கலாய்க்க வைத்திருக்கின்றது. சமயத்தின் தூய்மை கெட்டுவிட்டதே என்று வேதனைப்பட வைத்திருக்கிறது. ஆலயங்களில் தமிழில் பூசை செய்யலாமா? அபத்தம்! அபத்தம்! என்று அலற வைத்திருக்கிறது. மொத்தத்தில் கலசம் ஒரு சிந்தனைப் பலகணியைத் தொடக்கி வைத்திருக்கிறது. கலசம் சஞ்சிகையினூடு கருத்துப் பரிமாறல் பகுதியில் ஏராளமான கருத்துக்கள் குவிந்துள்ளன. சில நண்பர்கள் வேதனையில் முக்கிமுனகி கலசம் ஆசிரியரை தனிப்பட்ட முறையில் தாக்கித் திருப்திப்பட்டுள்ளனர்.

மாற்றப்படவேண்டிய, சிந்திக்கப்படவேண்டிய சில விடயங்களை கலசம் 25 இல் தொட்டோம். தொட்டதற்கே இவ்வளவு வெட்டுக்குத்து என்றால் தொடரப் போகின்றவற்றிற்கு என்ன செய்யப் போகின்றார்கள். நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்!

சைவ சமயம் ஒரு சிலருக்கே உரித்தான சொத்து அல்ல!. மக்களுடைய சமயம் இது. காலத்திற்கேற்ப மாற்றங்கள் வரும். ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதுதான் சைவ சமயம் விரும்பினால் கடைப்பிடி அல்லது விட்டுவிடு என்றால் அதை ஏற்றுக் கொள்ள நாம் தயாரில்லை. இம்முறை ஆறுமுகநாவலர் எழுதிய சைவ சமயம் என்ற கட்டுரையைப் போட்டிருக்கின்றேன். சைவன் ஒருவன் மாதா கோவிலுக்குப்போனால் அவன் சிவத் துரோகி என்று நாவலர் பெருமான் கூறியிருக்கிறார். இக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண டும் என்பதற்காக அல்ல சிந்திப்பதற்காகவே!!

சைவ நன்மணி செல்லப்பா அவர்கள் விழிப்புணர்வு என்னும் கட்டுரை மூலமா யார் பிராமணன் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார். இதை அவர் புரிய வைக்க பாவித்த ஆதாரங்கள் திருமந்திரமும் புத்தமத நூலான தம்மபதமும் ஆகும் என்பதை மனங்கொள்ளுங்கள். இம்முறை பெண்கள் பகுதி சிறப்பு வடிவமெடுத்துள்ளது. சிறுவர் பகுதியில் பல சிந்தனைக்கட்டுரைகள் தரப்பட்டுள்ளன. நீங்கள் சிந்திக்கவேண்டும். உங்கள் சிந்தனையின் மூலம் சமூகம் பயன் பெறவேண்டும்.

ஆசிரியர்

# சைவசமயம்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள். பசுக்கள் எண்ணில்லா தவர்கள் பசுக்களாவார் தேவர்கள் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ள சீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல் லாதவர் பதி ஒருவரே! அந்தப் பதி சிவபெரு மான். சிவபெருமானுக்குப் பசுக் களெல்லாம் என்றும் அடி மைகள். சிவபெருமான் அந் தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்க ளையெல்லாம் ஆளுந் தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி.(பசுக்களுக்குப்பதி–பசுபதி. பசு–ஆன்மா பதி–தலைவன்)

இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிற மார்க் கஞ் சைவசமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவசமயம் ஆகாது. சிவ பெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றாவது கொள்வது சிவத் துரோகம்.

சிவபெருமானின் வேறாகாத திரு வருளே சிவசக்தி: இந்தச் சிவ சக்தியே பார்வதி தேவியார் என்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன் மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த் தங்கள்:–

விநாயகக் கடவுள், சுப்பிரம ணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள். இவர்களுக்குச் செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்க மேயாம். சக்தி–வல்லமை.

**முப்பத்து முக்கோடி தேவர்களைப் பரம் என்றுகொண்டு**



**வணங்குகிற மார்க்கஞ் சைவ சமயம் என்று மூடர்கள் பலர் சொல்லுகிறார்கள். மனிதர்களைப் போலவே பிறந் தும், இறந்தும் உழலுகிற தேவர் களைப் பரம் என்று கொள் வது சைவ சமயத்துக்கு முற்றும் விரோதம்.**



சைவசமயிகள் அஞ்ஞானிகள் (Heathens) என்று கிறிஸ்த்தவ ர்கள் வழங்குகிறார்கள். அஞ் ஞானிகள் என்ற சொல்லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறிகிற அறிவு இல்லாதவன். கிறிஸ் தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள் சைவசமயிகளை அஞ்ஞா னிகளென்று வழங்கலாமென்றால், சைவசமயிகளுந் தங்கள் கருத் தின்படி தாங்கள் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகள் என்று வழங்கலாமே!

**சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு, அநேக மூடர்கள், உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதை களையும், காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரை வீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக் கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், பெரிய தம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்கு கிறார்கள்.** இந்தியாவில் அநேக மூடர்கள் முகமதியருடைய பள்ளி வாயிலைச் சேவிக்கிறார்கள். இலங் கையில் அநேக மூடர்கள் ரோமன் கத்தோலிக்கருடைய மரியை கோயி லுக்குக் காணிக்கை செலுத்து கிறார்கள். இவர்கள் எல்லாருஞ் சிவத்துரோகிகள்: இவர்களே அஞ் ஞானிகள்.

சைவசயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும், சைவ சமயக் கோவிலைத் தமிழ்க் கோயில் என்றும், அறிவில் லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று: ஒரு மொழியின் பெயர்.

பெறுவதற்கு அரிய மனிதப் பிற வியைப் பெற்றும், மிக மேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக் கடவுள் இப்படிப் பட்டவர், அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து அறிந்து கொண்டு, சைவசமயத்தை அநுட்டியாது, நேர்ந்த நேர்ந்தபடி நடப்பது, ஐயையோ! நரகத் துன்பத்துக்குக்

காரணம்.

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவதற்குக் காரணம், சைவசமயத்தைச் சைவசமய குருமார்கள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே. யாதாயினும் ஒரு சமயத்தை அறிந்து பிரசங்கஞ் செய்யாதவர்கள், அந்தச் சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்று சொல்லிக் கொண்டு திரிவதும், அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவதும் என்னை! வெட்கம்! வெட்கம்!

## அருளாளர் காட்டும் இயற்கைக் காட்சிகள்

திருமுது குன்றத்துக் குறத்திகள்

திருமுதுகுன்றத்து வனத்தில் களிறும் பிடியும் (ஆண்யானையும், பெண்யானையும்) சேர்ந்து நடக்கின்றன. பிடியோ கன்று ஈனும் நிலையில் இருக்கின்றது. அதற்கு ஆண்யானையின் துணை தேவையான நேரம். ஆனால் அங்கு வந்த சிங்கமோ களிற்றைக் கொன்று இழுத்துச் செல்கின்றது. பிடி நின்று தவிக்கின்றது. அந்தப் பிடியை (பெண் யானையை) திருமுதுகுன்றத்துக் குறத்திகள் பிடித்து தங்கள் குடிலின் முற்றத்தில் கட்ட அது கன்று ஈனுகின்றது.

இந்தக் காட்சியை சுந்தரர் மிக அழகாக தமது தேவாரத்தில் சித்தரிக்கின்றார்.

குன்றிலிடைக் களிறு ஆளி கொள்ளக் குறத்திகள்
முன்றிலிடைப் பிடி கன்றிடும் முதுகுன்றரே

–தமிழினி–

# எண்ணியது ஒன்று நடந்தது இன்னொன்று
## பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ண பரஹம்ஸர்

ஒரு பெருமாள் கோமிலுக்கு அருகில் துறவி ஒருவர் வசித்துவந்தார். எதிர் வீட்டில் வசித்துவந்தவளோ ஒரு தாசி. அடிக்கடி பல ஆண்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். அடடா! இவள் இப்படிக் கேடுகெட்ட தொழில் செய்கிறாளே என்று துறவி வருத்தப்பட்டார். ஒருநாள் அந்தத் தாசியைப் பார்த்து தாசித்தொழில் செய்வதன்மூலம் நீ மிகப்பெரும் செய்து வருகிறாய். இதை விடுத்து இறைவன் அருளை வேண்டிப் புண்ணியம்தேடு என்றார்.

இதைக்கேட்டதாசி தான் செய்யும் செயலைவிட்டுத் துன்பம் கொண்டாள். கடவுளே எனைக் காப்பாற்று என தினமும் வேண்டிக்கொண்டாள். எனினும் பிழைப்புக்கு வழியில்லாததால் மீண்டும் அதே தொழிலையே தொடர்ந்தாள்.

தான் உபதேசித்தபிறகும் தாசி அவளது பாவச் செயலைத் தொடர்வது குறித்து துறவி மிகுந்த கோபம் அடைந்தார். இவள் இன்னும் எத்தனை பாவங்கள் செய்கிறாள் என்பதைப் பார்த்துவிடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். அதன் பிறகு அந்தத் தாசியின் வீட்டுக்கு ஆண்கள் வருகின்றபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் ஒரு கூழாங்கல்லை எண்ணிக்கைக்காக அவளது வீட்டு வாசலில் போட ஆரம்பித்தார். ஒரு நாள் இந்தக் கூழாங்கற்கள் மலைபோல் குவிந்தன. அப்போது எதிர்வீட்டுத் தாசியைப்பார்த்து துறவி கூறினார். பார்த்தாயா இந்தக் கற்களை? எத்தனை பாவம் செய்திருக்கிறாய் என்பதை அறிந்து கொண்டாயா?

இந்தப் பாவமலையைப் பார்த்து கடவுளே என்னை அழைத்துக் கொள்ள மாட்டாயா? என்று மனமுருகி வேண்டிக்கொண்டாள். அன்றிரவே அந்தத் தாசி இறந்துபோனாள்.

ஆண்டவனின் திருவிளையாடலால் அந்தச் சமயத்திலேயே துறவியும் இறந்துபோனார். என்ன ஆச்சரியம்! தாசியை வைகுந்தத்துக்கு அழைத்துப்போக விஸ்ணு தூதர்கள் வந்திருந்தார்கள். துறவியையோ நரகத்துக்கு அழைத்துப்போக எம கிங்கரர்கள் வந்திருந்தார்கள்.

வாழ் நாளெல்லாம் இறைபணி செய்த எனக்கு நரகமா? தாசிக்கு சொர்க்கமா? வியப்புடன் கேட்டார் துறவி.

துறவியே! நீங்கள் வெளிப்பெருமைக்காக இறைவன் நாமத்தை ஜபித்தீர்கள். உள்ளுக்குள் அடுத்தவரின் அழுக்குகளைப் பற்றியே சிந்தித்தீர்கள். அந்தத் தாசியோ உடலால் கெட்டிருந்தாலும் உள்ளத்தால் இறைவன் றருளையே நாடி நின்றாள்.

எண்ணங்களுக்கேற்பவே சொர்க்கமும் நரகமும் என்று கூறிமுடித்தனர்.

# விழிப்புணர்வு

சைவ நன்மணி செல்லப்பா

பிராமணனைப் பற்றித் திருமூலரும் புத்தபிரானும் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளனர். முதலாந் தந்திரத்தில் அந்தணன் ஒழுக்கம் என்ற தலைப்பில் திருமூலர் 14 திருமந்திர விருத்தப் பாக்களை இயற்றி எம்மை நெறிப்படுத்துகிறார். அதேபோலப் புத்தபிரானும் தம்மபதத்தின் 26ஆவது அத்தியாயத்தில் பிராமணவாக்கு என்னும் தலைப்பில் உபதேசம் செய்து எம்மை நெறிப்படுத்துகிறார். உண்மையான பிராமணன் விழிப்புணர்வும் அருளும் உடையவனாய்ப் பந்த பாசங்களிலிருந்து விடுபட்டவனாய், சமாதி நிலை அடைந்து சாந்த சொரூபியாய் விளங்குவான் என்பதை இருவரும் எவ்விதப் பேதமும் இன்றித் தெளிவுபடுத்துகின்றனர். சடங்கு அறுப்போர் பிராமணர் என்பதை இருவருமே வலியுறுத்துகின்றனர். பிராமணர் உலக விடயங்களை விட்டு ஒரு விழிப்புணர்வுடையவரென்பதே திருமந்திரத்திலும் தம்மபதத்திலும் விளக்கப்பட்டுள்ள சிறப்பு அம்சமாகும். இவற்றைக் கூறும் திருமந்திரம் இதோ:-

> சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
> ஒத்தவிடயம் விட் டோரும்
> உணர்வின்றிப் பத்தியும் இன்றிப்
> பரன்உண்மை இன்றிப் பித்தேறு
> மூடர் பிராமணர் நாம்அன்றே!

இங்கே பிராமணருக்குரிய குணாதிசயங்கள் எதிர்மறையாகக் கூறப்பட்டுள்ளமை கவனத்துக்குரியதாகும். பொய்யான அஞ்ஞான நெறியில் மன உணர்ச்சியுடன் மெய்ஞ்ஞானம் பெறாதுள்ள மூடர்களைப் போன்று உள்ளவர்கள் பிராமணர்கள் அல்லர் என்பது அப்பாடலின் எதிர்மறை விளக்கமாகும். மன உணர்ச்சி நிலையில் உலக விடயங்களில் கவனம் செலுத்துவோர் மூடர் என்பதும், ஆன்மீக விழிப்புணர்வு நிலையில் பொய்யானவற்றைப் பொய்யெனக் கண்டு மெய்யுணர்தல் பெறுவோரே பிராமணராவர் என்பதும் புலப் படுகிறது. சமாதி கைகூடும் போதுதான் விழிப்புணர்வு உள்ளிருந்து சுயமாகவே மலரும் என்பதைத் திருமூலரும் புத்தபிரானும் ஒருமுகமாகத் தெளிவு படுத்துகின்றனர்.

பிராமணர் யார்? என்பதிற்கூட இருவருக்குமிடையே ஒருமைப்பாட்டைக் காண்கிறோம். வேதத்துக்கு உரை எழுதிய மனு கூறிய வருண நீதிக் கொள்கைகளை இருவரும் நிராகரித்துள்ளனர். வருண நீதி நான்கு குல பேதங்களை மக்களிடையே புகுத்தி ஒவ்வொரு குலத்தினர்க்கும் வெவ்வேறு நீதியை வேதத்தின் பெயரால் ஆக்கப்பட்டுள்ளதாகும். திருமூலர் செய்த இதோப தேசத்தின் மூன்றாவது செய்யுளில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று விளக்கியுள்ளதைக் காண்க. மேலும் பூநூலும் சிகையும் பூண்டவர்கள் எல்லோரும் பிராமணர் அல்லர் என்பதையும், நூலானது வேதாந் தத்தையும், சிகையாகிய குடுமி மெய்ஞ்ஞானத்தையும் எடுத்துக் காட்டும் அடையாளங்களாக உள்ளன என்பதையும் 230-வது செய்யுளில் தெளிவு படுத்தியுள்ளார். நூலும் சிகையும் வேடமாகக் கொள்ளாவிடினும், **<u>வேதாந்த நெறி நின்று மெய்ஞ்ஞானம் பெற்ற எவரும் பிராமணராவர் என் பது திருமூலர் கூற்றாகும்.</u>** புத்தபிரானும் இதை வலியுறுத்தியுள்ளார்.

பிராமணர் யார்? என்பதைப் புத்தபிரானுடைய ஆச்சிரமத்தில் நிகழ்ந்த ஒரு உண்மையான சம்பவம் விளக்குகின்றது. பிராமண குலத்திற் பிறந்த ஒரு பிராமணன் புத்தபிரானிடம் உபதேசம் பெறும் பொருட்டு அவருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றிருந்தான். அங்குப் புத்தபிரான் தமது சீடர்களாகிய பிக்குமாரைப் பிராமணர் என அழைப்பதை அவன் கவனித்தான். எனவே தான் பிராமண குலத்திற் பிறந்தபடியால் தன்னையும் பிராமணா என அவர் அழைப்பார் என எதிர்பார்த்தான். ஏமாற்றம் அடைந்தான். அதைப் பற்றி அவரிடம் காரணம் கேட்டான். அதற்குப் புத்தபிரான் அளித்த விடை ***<u>ஒருவன் பிறப்பினாலோ அல் லது வெளிவேடங்களினாலோ பிராமணன் ஆவதில்லை. அதி உன்னதமான இலட்சியத்தை அடையும் பொருட்டுப் பந்த பாசங்களை நீக்கி உயர்ந்த நான்கு உண்மைகளையும் சரிவரத் தெளிந்து செயற்படுபவனே பிராமணனாவான் பிறப்பினாலும் புறவேடத்தினாலும் தன்னைப் பிராமணனென அகங்காரம் கொண்டிருந்த அந்தப் பிராமணன் அறநெறி ஒழுக்கத் தினால் மட்டுமேதான் உண் மையான பிராமணன் ஆகலாம்</u>*** என்பதை உணர்ந்தான். இதிலி ருந்து நாம் கிரகித்துத் தெளிய வேண்டியது யாதெனின் மோட்ச மாகிய

இலட்சியத்தை அடைவதற்கு நாம் எவராயிருந்தாலும் சரி பிராமண நிலை அடைதல் வேண்டும் என்பதாகும். **ஆன்மீக விழிப்புணர்வே பிராமணீயத்தின் ஆணிவேராகும்.**

திருமூலர் தமது குருவாக வழிபட்ட நந்தியைப் பற்றியும் மகேசனைப்பற்றியும் மற்றும் புத்தபிரான் தம்மபதத்தின் கடைசி அத்தியாயத்தில் கூறியிருக்கும் உண்மையைப் பற்றியும் ஒப்பு நோக்குதல் நன்றாகும். மறைஞானம் பெற்ற பிராமணனிடம் உள்ள சிறந்த குணாதிசயங்களைப் பற்றி விளக்கும் நாற்பதாவது சுலோகத்தில் தம்மபதம் கூறுவகைப் படித்துப் பாருங்கள்:-

**உஷபம் பவறம் வீரம்**
**மகேசிம் நகாதகம் புத்தம்**
**தம் அகம் புறூமி பிராமணம்**

ஞான போதத்தையே புத்தம் எனக் குறிப்பிட்டுள்ளார். உஷபம் நந்தியின் அடையாளமாகும். அதன் மறை பொருள் அச்சம் இன்மையாகும், மகேசனின் மறைபொருள் நன்னெறியையும், சமாதியையும் மெய்ஞ்ஞானத்தையும் நாடுபவன் என்பதாகும். நகாதகத்தின் அகப் பொருள், பந்த பாசங்களாகிய மலங்களில் இருந்து விடுதலை பெற்றவனாவான். நந்தியை வழி படுபவனிடம் ஆன்மீக வீரம் உண்டாகும். இத்தகைய குணாதி சயங்கள் உடையவனையே புத்தபிரான் பிராமணன் என அழைக்கிறார். இதன் பிரகாரம்

திருமூலரும் புத்தபிரானும் பிராமணர்களாகத் திகழ்ந்தனர் என்பதை நாம் கிரகிக்க முடிகிறது.

மேலும் மறைஞானம் பெற்ற பிராமணன் விருப்பு வெறுப்பு அற்றவனாகவும் நன்மை தீமை அறிவு அறியாமை ஆகிய மனச் செயற்பாட்டின் இருமை வகைகளையும் சமமாக நோக்கும் நடுவு நிலைமை உடையவன் ஆகவும் திகழ்வான் என்பது திருமந்திரத்திலும் தம்மபதத்திலும் தெளிவு படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்: பரவசம் அடைகிறோம். நாமும் பிராமணனாக வாழ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

புறப் பொருளை நிர்மாணிக்கும் சிற்பி மனமாகும். மனத்தில் எழும் காம இச்சை, பாவ இச்சை, விபாவ இச்சை ஆகிய மூன்று இச்சைகளும் சிந்தனை மூலமும் கற்பனை மூலமும் மக்களைப் பந்திக்கின்றன. அருவமான பொருள்களைப் பற்றி மனோ கற்பனை செய்தல்கூட விபாவ இச்சையாகும். இவற்றைப் பற்றிய ஆன்மீக விழிப்புணர்வுடையவனே பிராமணன் ஆவான்

ஆன்மீக விழிப்புணர்வென்பது கடவுளைப் பற்றியோ அல்லது ஆன்மாவைப் பற்றியோ சாதகர்களுக்கு ஏற்படும் உணர்வு எனச் சில உரை ஆசிரியர்கள் விளக்கங் கூறுகின்றனர். இத்தகைய விளக்கத்தைத் திருமூலரோ அல்லது புத்தபிரானோ கொடுத்துள்ளதாகப் புலப்படவில்லை. ஆன்மாவும் கடவுளும் மனத்தில் ஏற்படும் சுட்டறிவைக் கடந்தனவாகும். அவற்றைப்பற்றி மனத்தினாற் கற்பனை உணர்வுகளைப் பெருக்கும் சாதனை செய்வதால் அவற்றை முழுமையாகத் தெளிதல் இயலாததாகும். எனவே அவற்றைப் பற்றிய மெய்யுணர்தல் பெறுவதற்கு என்ன செய்தல் வேண்டும்? என்னும் விசாரணை சாதகர்களிடம் எழுதல் சகஜமாகும். வேண்டிய விடை கொடுத்தல் எமது கடமையாகும்.

பூரணத்துவமான சத்தியத்தையோ அல்லது பரம்பொருளையோ மனத்தினாற் கண்டுபிடிக்க இயலாவிடின் பரவாயில்லை, ஆனால் பொய்யான வற்றைப் பொய்யெனக் கண்டு பிடிக்கும் ஆற்றல் மனத்துக்கு உண்டு. அதையே அவதான ஆற்றல் அல்லது விழிப்புணர்வு எனத் திருமூலரும் புத்தபிரானும் அபிப்பிராய பேதமின்றித் தெளிவு படுத்தியுள்ளனர். தம்மபதத்தின் இரண்டாவது அதிகாரத்தில் அபமாதவாக்கு என்னும் தலைப்பில் விழிப்புணர்வைப் பற்றிய விசேடமான தனி விளக்கம் வருகின்றது. அபிரமாதம் என்னும் சமஸ்கிருதச் சொல்லே பாளி மொழியில் அபமாத என வழங்கப்படுகிறது. இதன் அகப்பொருள் காலத்துக்கும் அதனால் ஏற்படும் தாமதத்துக்கும் கட்டுப்படாது இருத்தலாகும். இங்கே குறிக்கப்பட்ட காலம் சூரியனைக் கொண்டு கணிக்கப்படும் காலம் அன்று. மன விருத்தியினால் நிகழும் உளவியற் காலத்தையே இங்கு விசேடமாகக் குறிக்கப்படுகிறது. மனத்தில் பதிய வைத்துள்ள சிந்தனைகள் யாவும் இறந்த காலத்தனவாகும். இந்தச் சிந்தனைகளின் இயல்பு, நிகழ் காலத்தைப் புறக்கணித்துக் கற்பனையால் ஆக்கப்படும் ஒரு பொய்யான எதிர்காலத்தை நோக்கி ஓடுதலாகும். இங்ஙனம் விலகி ஓடும் சிந்தனைகளால் நிகழ் காலத்தில் உருவாகும் ஆன்மீகப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து விசாரணை செய்து தீர்வு காண இயலுமா? எனவே பிரமாதம் என்னும் காலதாமதத்துக்கும் கட்டுப் பாட்டுக்கும் உட்படாது மனோ

விகாரங்களைப்பற்றி அவதான ஆற்றலுடன் விசாரணை செய்து அவற்றின் பொய்யான செயற்பாட்டைப் பொய்யென உணர்ந்து அவற்றிலிருந்து முழுமையான விடுதலை பெறுவதற்கு ஆதாரமாக உள்ளதே அபமாத என்னும் ஆன்மீக விழிப்புணர்வாகும். அதை மனநிறைவு என்றும் வேறு சொற்றொடரால் புத்தபிரான் விளக்கு கிறார். மன நிறைவு என்பது மனோ சக்தியின் நிறைவு அன்று: மனம் சாந்தி அடையும்போது அதாவது சலனம் அற்று மௌனம் ஆகும்போது அதனிடம் நிறை வாகும் அறத்தின் சக்தியே உண்மையான மன நிறைவாகும். இத்தகைய மன நிறைவையே அபமாதம் என்னும் மரணமிலாப் பெருவாழ்வு என விளக்குகிறார். அபமாதத்தின் பாதை மரணத்துக்கு இட்டுச் செல்வதாகும். இதை விளக்கும் தம்மபதம் இதோ **அபமாதோ அமர்த்த பதம் பமாதோ மக்சூனோ பதம். அபமாதம் மரணமிலா வாழ்வாகும். அறத்தின் சக்தி வியாபகமானதாகும். பரம் பொருளைப் போல அது நீக்கம் அற எங்கும் நிறைந்ததாகும்.** திருமூலர் அதைச் சுத்த சக்தி என விளக்கம் கூறுகிறார்.

சுத்த சக்தியானது ஒளிர்ச் சோதியாக மோனசமாதிநிலையில் உள்ளிருந்து பிரகாசிக்கும். இந் நிலையை அடைய வேண்டும் எனின் ஒரு சாதகன் மனத்தினுடைய மூன்று அவஸ்தைகளையும் விட்டு நீங்கி நான்காவது பரிமாணமாகிய துரியாதீத நிலை எய்துதல் வேண்டும். துரியாதீத நிலை என்பது மனத்தினுடைய விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் கடந்ததாகும். அதை அனுபூதி நிலையென விளக்கும் திருமந்திரம் இதோ:-

**துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி**
**அரிய துரிய மதில்மீது மூன்றாய்**
**விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே**
**உரையில் அநுபூ திகத்தி னுள்ளானே!**

மாயா சம்பந்தமான மனத்தின் இயல்பு விரிதலும் குவிதலுமாகும். அதனாலேயே நாம் இருவினைக்கு உட்படுகிறோம். அறிவு அறியாமைக்கு இடமாகிறோம். இறப்புப் பிறப்பு எய்துகிறோம். இவற்றிலிருந்து விடுதலை பெறுதலே மோட்சமாகும். துரிய நிலையிலிருந்து நீங்க வேண்டுமாயின், மனத்தின் அவஸ்தைகளைப்பற்றி அவதான விழிப்புணர்வுடன் கவனித்து மெய்யுணர்தல் பெறுதல் வேண்டும். அந்த நான்காவது பரிமாணத்திலுள்ள அநுபூதி நிலையைப் புத்தபிரான் போதி நிலை-யெனக் கூறுகிறார். இதில் ஒருமைப்பாடு பெறுகின்றனர்.

MARKANDAN & CO
SOLICITORS
*Empowered to Administer Oaths*

Legal Aid

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

LEGAL AID

TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303

# சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்

- தனபாக்கியம் குணபாலசிங்கம் -

வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் யோகியர் ஞானியர் என்போர் வேறுபாடு காண்கிலர், திருமூலர் இவ்விரு தத்துவங்களின் அடிப்படைகளும் முடிவுகளும் ஒன்றாயிருத்தலாலே சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும் என மொழிந்தனர். பிரம்ம சூத்திரத்திற்கு வட மொழியில் உரையெழுதிய ஸ்ரீநீலகண்ட சிவாசாரியாரும், தம் உரையில் வேதத்திற்கும், சிவாகமங்களுக்கும் வேற்றுமை கண்டிலம் என்றனர். இவ் வொற்றுமையினாலேயே தேவாரங்களையும் காசிவிசுவநாத ஐயர் தேவாரம் வேதசாரம் எனக் குறிப்பிட்டனர்.

முதற் கண் இவ்விரு தத்துவங்களின் கோட்பாடுகளைச் சுருக்கமாக ஈண்டு நோக்கல் உகந்ததாம். வேதாந்திகள் உண்மைப் பொருளாகிய பிரம்மம் (பரம்பொருள்) ஒன்றே முதலில் இருந்தது. அது நான் பலவாகுவேன் எனச் சங்கற்பித்துப் பிரபஞ்சமாகவும், சிற்றுயிர்களாகவும் விரிந்தது. பிரம்மத்தின் இவ்விரிவு வெறும் விளையாட்டே. அதனால் இவ்வாறு விரிந்த பஞ்சபூதங்களாலான பிரபஞ் சமும், 85 ஆயிரம் யோனி பேதங்களைக் கொண்ட உயிர்த் தொகுதிகள் அனைத் தும் அப்பிரமத்தின் பகுதிகளே (அங்க உறுப்புக்கள்) ஆம். அதனோடு இவ்வுயிர்த் தொகுதிகள் அனைத்தின் மூச்சும் அவரதேயாம். இவ்வாறு வேதாந் தம் விபரிக்கும் உயிர்த் தொகுதிகளின் ஆதி இயல்பு குற்றமற்ற பிரமத்தின் இயல்பேயாம். ஆனால் பிரமத்தின் விரிவால் உயிர்களுக்கேற்பட்ட பஞ்சபூதத் தொடர்பான உடல் தொகுதிகள் சாத்வீகம், ராஜசம், தாமசம் எனும் முக் குணங்களின் தாக்கத்திற்கமைய உயிர்கள் பாவ, புண்ணியங் களைச் செய்கின்றன. இவ்வாறு பிரபஞ்ச வலையுட் சிக்குண்டபின் உயிர்கள் தமக்கும் தம் பிதாவிற்குமுரிய (பிரம்மம்) தொடர்புகளை மறந்துவிடுகின்றன. ஏனெனில் அவையெய்திய உடலின் வியாபகம் அளவே அவற்றின் வியாபகமும், அறிவுமாம்.

பிதாவாகிய பிரம்மம் (பரமாத்மா) தனது சத்-சித்-ஆனந்த உடலை எப்பொழுதும் தரித்திருப்பவராதலால், அவர் இவ்வெல்லா உயிர்த் தொகுதிகளிலும், பிரபஞ்சத்திலும் வியாபகமாகி எக்காலத்தும், எல்லாம் அறியும் ஆற்றலுடையவராவர். சிற்றுயிர்கள் அவரது பகுதிகளாக விருந்தும் கூட பிரபஞ்சத் தொடர்பான உடற்கருவிகளைப் பெற்றிருப்பதனால் எல்லாம் அறியும் ஆற்றல் அற்றவை. எனினும் பிதாவை நினைந்து வாழ்ந்து, பிதாவின் அருளினால் பிறவித்தளை நீங்கி முத்தியடைகின்ற சிவமாகல் நிலை ஏற்படும் காலத்திலும் இவை பிரம்மமேயாகமாட்டா. ஆயினும் முத்தி நிலையில் தாம் அந்தப் பிரமத்தின் அம்சம் என்பதனை அறியும் ஆற்றலைப் பெறுகின்றன. அதனால் பரமாத்மாவின் அழியாமின்பத்தில் சிவமாகும் நிலையை யெய்துகின்றன. இந்த அடிப்படையிலே தான் வேதாந்தம் காண்பவன், காட்சி, காட்சிப்பொருள் யாவும் ஒன்றே எனக் கூறும். அதனோடு உயிர்கள் அப்பரமாத்மாவின் பகுதிகள் என்ற அடிப்படையிலேதான் நீ அதுவாக இருக்கின்றாய், நான் அந்தப் பிரம்மமாக இருக்கின்றேன், இதெல்லாம் அந்தப் பிரம்மமே என வேதாந்தம் கூறியருளும். அதனால் ஆண்டவனை அடிமையென்றும், அடிமையை ஆண்டவனென்றும் வேதாந்தம் முரண்படவில்லையென்பது புலனாம்.

பரமாத்மா, உயிர்களுடன் பிரியாதிருந்து, அவற்றின் இச்சைப்படி செலுத்திப் பார்த்திருப்பான் என்பதனை இருக்குவேதமும் (1.164-10) முண்டக உபநிடதமும் (3-1-1) பின்வரும் உதாரணம் கொண்டு விளக்குகின்றன.

இரு பறவைகள் (பரம்பொருளும், உயிரும்) ஒரு மரத்தில் (உடலில்) இணைபிரியாதிருக்கின்றன. அவற்றுள் ஒன்று (உயிர்) இனிய கனியை (உலக இன்பங்களை) சுவைத் திருக்கின்றது. மற்றது (பரம்பொருள்) சுவைக்காது அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. இனிக் கைவல்லிய உபநிடதமும் இதயமாகிய குகையினில் உயிரையும் பிரணவத்தையும் (பரம் பொருள்) முறையே கீழ்விற காகவும்,

மேல்விறகாகவும் கருதித், தீக்கடைக்கோலினால் தூண்டுபவன் பாசத்தை (உலக போகங்களை) எரிக்கின்றான் எனக்கூறும். இவ்வாறு வேதாந்த தத்துவத்தின் பிறப்பிடமான வேத, உபநிடதங்களில் இறை, உயிர், தளை என்ற மூன்றின் தனித்துவ இயல்புகள் காட்டப்பட்டிருக்கின்றன. மேற்காட்டப்பெற்ற உதாரணங்களிலிருந்து பரமாத்மா உயிருடன் ஒன்றாய், உடனாய் இருப்பவனாயினும் அவன் அவ்வுயிரினும் வேறானவன் என்ற உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது என்பது புலனாம்.

இனி, சைவசித்தாந்தம் பதி,பசு, பாசம் என உண்மைப் பொருள்களை மூன்றாகவே காட்டும். வேதாந்திகளின் அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் என்பன யாவும் சித்தாந்திகளுக்கும் ஏற்றதாம். எனவே இவற்றில் ஒன்றையொன்று தள்ளுவதென்பது சித்தாந்தக் கோட்பாட்டிற்கு மறுதலையாம். எனவே வேதாந்த சித்தாந்தச் செல்வர்களான திருவள்ளுவர், காரைக்காலம்மையார், மணிவாசகர், திருமூலர், தேவாராசிரியர்கள், வாகீசமுனிவர் முதலான பிறரும் நின்ற நெறிப்படி, வேதாந்தத்தைச் சைவசித்தாந்த வழிப்படி முதலில் நெறிப்படுத்தியவர் மெய்கண்டார் ஆவர். பின் அவரது வழிநின்ற அருணந்தி சிவாசாரியார் வேத நூல், சைவ நூலிரண்டே மற்ற வையெல்லாம் இவற்றின் பிரிவே என்பர். இந்நெறிப்படி நின்று, சைவ சித்தாந்த சார்பு நூல்களை எழுதியவரான உமாபதிசிவாசாரியார் தமது சிவப்பிரகாசம் எனும் நூலில்

**வேதாந்தத் தெளிவாஞ் சைவ**
**சித்தாந்தத் திறனிங்குத்**
**தெரிக்கலுற்றாம் (செய்–7)**

எனக்கூறுவர்.

இவ்வாறு வைசித்தாந்திகள் காட்டிய பதி முற்றறிவினன், தன்வயத்தன், தூயவுடம்பினன், வரம்பற்ற இன்பமுடையவன், இயற்கையறிவினன், பாசப்பிணிப்பற்றவன், பேரருளுடையவன், முடிவில்லா ஆற்றலுடையவன் முதலான எண்குணத்தன். உயிர்களோவெனில் அநாதியே பீடிக்கப்பட்ட ஆணவத்தினால் அறிவு மறைப்புண்டு அறியாமையென்ற இருளிற் கிடக்கின்றன. இந்நிலைக்கிரங்கியே இறைவன் உயிரின் ஈடேற்றத்தின் பொருட்டு மாயையாலான தனு, கரண, புவன போகங்களை விரித்துக் கொடுத்து, உயிரின் அறிவிற்கு அறிவாக நின்று இயக்குகின்றனன். இறைவனின் இவ்வருட் செயலையே திருஞானசம்பந்தர்,

**உரைசேரும் எண்பத்து நான்கு**
**நூறாயிரமாம் யோனிபேதம்**
**நிரை சேரப் படைத்தவற்றின்**
**உயிர்க்குயிராய் அங்காங்கே**
**நின்றான்** என்றும்,

திருநாவுக்கரசர்,

**ஆண்டு லகேழனைத்தினையும்**
**வைத்தார் தாமே அங்கங்கே**
**சிவமாகி நின்றார் தாமே** என்றும்

போற்றினார்கள்.

இவ்வாறு பெத்தநிலையில் ஆணவ இருளில் செயலற்றுக்கிடந்த உயிர்களுக்குக் கிடைக்கப்பெற்ற மாயையிலான உடற் கருவிகள் விடிவாமளவும் விளக்குப் போன்று உதவுவதனாலும், பின் முத்திநிலையில் ஆணவம் ஒடுங்கி உலகத்தை மறைத்து இறைவனைக்காட்டி உதவுவதனாலும் உயிர் இறையின்பத்தை அனுபவிக்க முடிகின்றது. சார்ந்ததன் வண்ணமாய் அழுந்தி அறியும் இயல்புடைய உயிர் முத்தி நிலையில் இறைவனுள் அழுந்தி இறைவனை மட்டுமேயன்றி, மற்றொன்றினையும் அறியாது. இவ்வாறு உயிர் இறையுடன் இரண்டறக்கலந்து சிவமாகும் நிலையில், இறையின் எண்குணங்களை எய்தமாட்டா. இவ்வாறு வேதாந்த, சித்தாந்திகள் இறை, உயிர், பிரபஞ்சம் என்ற உண்மைப் பொருள்களை ஒன்றாகக்காட்டினால் என்ன, அல்லது வெவ்வேறு மூன்று பொருள்களாகக் காட்டினாலென்ன உயிர்களின் முடிவு சிவமாதலேயாம். அதனாலேதான் திருமூலர் வேதாந்தத்திற்கும், சித்தாந்தத்திற்கும் இடையேயுள்ள உட்தொடர்புகளைக் குறிப்பிடுகையிற்

**ஓங்காரத் துள்ளே உதித்த**
**ஐம்பூதங்கள் ஓங்காரத் துள்ளே**
**உதித்த சராசரம் ஓங்காரத்தத் துயிர்**
**மூன்றும் உற்றன ஓங்காரசீவ**
**பரசிவரூபமே** (திருமந்திரம்)

(இங்கு ஓம் என்பது பரம் பொருளையே)

என்று முதலில் உயிர், பிரபஞ்சம் யாவும் பரம்பொருளின் பிரதிபிம்பம் என்றும், பின்னர் சீவன் கட்டுண்ட நிலையில் சிவனை அறியாது இருக்குமாயினும், தன் முனைப் படங்கிச் சிவத்திலிருந்து தன்னை வேறாகக் காணாது சிவமாகவே காணும்என்றும் கூறுவார். இதனை

**சீவ னெனச்சிவ னென்ன**
**வேறில்லை**
**சீவ னார்சிவ னாரை அறிகிலர்**
**சீவ னார் சிவ னாரை அறிந்தபின்**
**சீவனார் சிவ னாயிட் டிருப்பாரே**
**(திருமந்திரம் செய்–1979)**

எனக்கூறுவதிலிருந்து உணரலாம். அதனாலே திருமூலர்

**சிவனைப் பரமனுட் சீவனுட்**
**காட்டும்**
**அவமற்ற வேதாந்த சித்தாந்தமான–**
**ான் (திருமந்திரம் 2356)**

**வேதாந்த சித்தாந்த வேறிலா முத்திரை (திருமந்திரம் 2346)**

**வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மை யொன்றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே (திருமந்திரம்)**

என்று வேதாந்த, சித்தாந்த முடிவுகளுக்குள்ள ஒற்றுமைகளைக் காட்டி, இவை இரண்டாந்தர மாயினும் பெரியார் வேற்றுமை காண்கிலர் என்பதனை

**வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்**
**பொதுவுஞ் சிறப்புமென்றுள்ளன நாதன் உரையவை நாட்டில் இரண்டந்தம்**
**பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே (திருமந்திரம்)**

எனக்கூறுவர்

**என்று நீ அன்றுநான்– உன் அடிமையில்லனே** என விழித்த தாயுமானவரும் **நான் அவனாய் நிற்பதெந்த நாள்** என்று தான் சிவமாகும் நிலையை அவாவினார். சம்பந்தரும் இறைவனை

**மாமாயாநீ மாமாயா**
**முன்னுயிர்த்தோற்றமும் இறுதியுமாகி விரிந்தனை குவிந்தனை என்று**

**எல்லாம் விழித்து வேதாந்தம் பேசிப் பின் ஒன்றாய் வேறாய் உடனான–**

**ானிடம் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்**

என்கையில் இறைவன் வியாபகத்தால் உலகுயிர்கள், பிரபஞ்சம் அனைத்தோனாகவும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாகியும், செலுத்தும் தன்மையினால் உடனுமாய் நின்று இயக்குவான் எனச் சித்தாந்தம் கூறியருளுவார்

காரைக்காலம்மையாரும்

**அறிவானுந் தானே அறிவிப்பான் தானே யறிவா யறிகின்றான் தானே–**
**அறிகின்ற மெய்ப் பொருளுந் தானே விரிசுடர் பாராகாசமப் பொருளுந்தானே யவன் (அற்புதத் திருவந்தாதி 20)**

என எல்லாம் அவனே என்ற இறைவனின் வியாபகத்தை வேதாந்த ரீதியில் உணர்ந்தவர். இனி மாயையைப் பரம் பொருளின் இயல்பாக வேதாந்தம் கருதிய மையை மணிவாசகர்

**மிண்டிய மாயாவாதம் என்னுஞ்**
**சட்டமாருதஞ் சுழித்தடித்தார்த்த**
**(போற்றித் திருவகவல் வரி 43–44)**

எனக்கண்டித்து, பின் இறைவயப் பட்டிருந்த காலை

**பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படர் ஒளிப்பரப்பே**
(கோயிற்திருப்பதிகம்)

**ஒன்றுநீ அல்லை அன்றி ஒன்றில்லை ஆருன்னை அறிய கிற்பாரே (கோ. திருப்பதிகம்)**

என்று **எல்லாம் அவனாய் நிற்கும்** நிலைகாட்டிப், பின்

**எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை அல்லையால் நிற்கும் சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் (பிடிபத்து)**

என வேறாய் நிற்கும் நிலைகாட்டி இறுதியில் தன்னைச் சிவமாக்கிய நிலையில்,

**சிந்தனைதனைத் தெளிவித்து சிவமாக்கி எனைஆண்ட**
**(கண்டபத்து)**

என இறை, உயிர், தளை ஆகியவற்றின் தொடர்புகளை வேதாந்த, சித்தாந்த நெறியிற் கூறியருளுவர்.

பட்டினத்துப்பிள்ளையாரும்

**––––சராசரம் அனைத்தும்**
**நின்னிடைத் தோன்றி, நின்னிடை–டயடங்கும் நீ**
**ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்**
**(கோயின் நான்மணிமாலை செய்– 25 வரி– 32)**

**––––ஓயாது உருகி நின்னினைந் தருவி சோரக்**
**கண்ணிற் காண்ப தெவ் வுலகினுங் காண்பன வெல்லாம்**
**நீயே யாகி நின்றதோர் நிலையே**
**(கோயின் நான்மணிமாலை செய்– 24 வரி– 16–18)**

எனக் காண்பதெல்லாம் அவனே யாகக் கண்டார்.

இந்நிலையுணராது ஒன்றுதான் உண்மைப்பொருள் மற்றவை யெல்லாம் அதன் பிரதிபிம்பமே என்ற ஏகான்மா வாதத்தை சிவஞான சித்தியார் மறுத்துரைக் கையில்

**உலகினைபிறந்து நின்ற தரனுரு வென்ப தோரார்**
**உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரார்**
**உலகினுக் குயிருமாகி யுலகுமாய் நின்ற தோரார்**
**உலகின்லொருவனென்ப ருரு வினை யுண ரரெல்லாம்**
**(சூத்திரம்– 1 அதிகாரம்– 2 செய்– 68)**

என இறைவனின் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கும் நிலையே ஏகான்மா வாதத்திற்கு அடிப் படையெனக் காட்டுவார். ஆயினும் யோகியர் வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்றவர்கள் என்பதனால் இரு வழிகளிலும் கடவுளைக் காண்பர். அதனாலேதான் யோகர் சுவாமிகள் கடவுளைக் கடவுளாற்றான் காணலாம் என்றனர். அவதார புருஷராகிய பகவான் சாயிபாபாவும் பிரபஞ்சம், உயிர்த் தொகுதிகள் யாவும் இறைவனின் விரிவே என்பர். அதனால் ஏகான்மா வாதத்தை இவரது அருள் மொழிகளில் நாம் பார்க்கக் காணலாம். உயிர்கள் பலவாயினும் மூச்சு ஒன்றே எனக் கீதையின் வழியில் பரமாத்மாவிற்கும், சீவான்மா விற்கு முள்ள உறவை

மிக நெருக்கமாகக் காட்டுவார். அதனால் முக்குணவயப்பட்டு தமது உண்மைநிலையை உணராதிருக்கும் உயிர்கள், இறைவனை எல்லா உயிர்களிலும், எல்லா உயிர்களையும் இறைவனிலும் காண வேண்டும் என்பர்.

இவ்வாறு உயிர்கள் அவனாகும் சிவபோகநிலை வேதாந்தத்திலும், சித்தாந்தத்திலும் முனைப்படங்கிய உயிரிடத்திலே மேலிடுவதாகும். அப்பொழுதே உயிர் நான் அவனே, அவனே இதெல்லாம் என உணரும் பாவனை ஏற்படும். அதனால் சிவமாதல் வேதாந்த, சித்தாந்தமாகும் என்ற திருமூலர் வாக்கு சாஸ்வதமானதாகும்.

அன்பே சிவம்.




**SHIPPING - AIR FREIGHT - TRAVEL**

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS

MAIN AGENT FOR AIRLANKA

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ

**GLEN CARRIERS LIMITED**

Tel: 0181 740 8379/ 0181 749 0595

Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G

BONDED WAREHOUSE

LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576

# Freedom and Discipline

By Professor Ramanuja Srinivasan

From Faces of Indian Culture

Freedom! a would to conjure with! a word most widely used - rather misused! What is freedom? A bird imprisoned in a cage is let loose, we say it has become a free bird; it has attained freedom from the cage that held it captive. But has it attained real freedom? Who can say! Freedom can only be relative in this manifested world; absolute freedom is only a metaphysical abstraction. When we speak of freedom, three ideas are involved in it. Working back-ward, first we attain freedom; then, from what: from something which obstructed that freedom, something which cribbed us limited our function and held us in bondage. Then thirdly, at an earlier stage we were free, unlimited, unconditioned,full freedom. These three ideas attainment of freedom, the fetters from where we free ourselves and the freedom. we enjoyed before we lost it- are all implied here. A fetter of bondage will have no significance unless there is in the first place a freedom which is so fettered.

We are told that in the Divine Bosom we are free, unfettered, unconditioned in the enjoyment of absolute Bless. We have always been free in that condition. But we, as human monads, units of Divine Consciousness, chose to descend from that free blissful state and get entangled in matter down here. We need not now discuss the question "Why should we have come down at all?" Nor is it fruitful to discuss the allied question "Why should God create this Universe and send us down here?" Anyway we are here, limited and conditioned all around.

Something in us urges us to seek freedom. The faint memory of our Divine nature of Bliss and Freedom spurs us, sometimes faintly and at other times insistently, to reach our true state in the Bosom of the Lord; but with this difference; originally we enjoyed Divine freedom and Bliss only in the Bosom of the Lord and were helpless when entangled in matter down here, but as a result of this entanglement and constant struggle to get freed from the entanglement we slowly attained mastery over matter and realised our Divinity, not only in the Divine Would which is our true home but also in the would of matter. There is a significant word used in Visishtaadvaita literature in this connection. In the Divine world Paramatma and jivatma are one, but there is this difference; the Lord has "Lakshmipatyam" which the human soul as such has not. Lakshmipatya means literally "Lordship of Lakshmi", that is mastery over prakriti, mastery over matter. This mastery is the prize we win as a result of the long evolutionary struggle.

So man ever seeks to be free, to be his true self. But he finds he is fettered all around. By "struggle" and experience gained as a result of that struggle he works to wards and finally achieves his freedom.

Freedom from what? Freedom from fear? Freedom from want? Freedom from pain and sorrow? Yes, all this and more. On ultimate analysis all these fetters which bind us and from which we seek to get freed will be found to get reduced to one fundamental fetter, the fetter that prevents us from being what we really are, that stands in the way of our manifesting the Divine essence in us. To this fetter we may give two names according to the viewpoint we take. We are essentially Gods but have forgotten our Divinity; we are angels, but fallen angels, having forgotten our angelic nature. It is the lack of knowledge of our own Divinity -Avidya- that is the one fundamental basic fetter; and all other fetters like fear, pain, want are only various expressions of the basic fetter avidya, ignorance. Lord Buddha laid great emphasis on this avidya as the root of all human misery.

Viewed from another angle this fetter will appear as the fetter of separateness. When one realises his Divinity he realises the essential Unity of all Life; and so to him there can be no sense of separateness. He is one with God and so with all life. Ignorance and separateness are only two facets of the same veil which hides Reality from us. True freedom is freedom from the sense of separateness. To put it in a positive way teal freedom consists in realising the essential Unity of everything that is, Sri Sankaracharya summed it up in one sentence:

"The state of non- separateness is alone Moksha."

In our daily life absolute freedom is an impossibility. We have absolute inner freedom undoubtedly, but this freedom expresses itself outwardly as discipline. Freedom and discipline are apparently contradictory, but this contradiction is only superficial: they can go together; in fact they co-exist in the case of advanced

human beings.

Nowadays, people have fantastic ideas about freedom. Now that India has attained "freedom" people think that they are free to do what they like, that none can curb their liberty. In other words they mistake freedom for license. If everyone feels free to do what he likes there will be utter chaos and confusion, every one will jostle against every other; it will be worse than the law of the jungle. This is so obvious and yet we see this misguided idea of freedom in evidence everywhere. People are losing respect for law and order because they think that law restricts their freedom and so can be disregarded. Even traffic rules are ignored because people think that the public road is all for them forgetting that the other person who uses that road has as much liberty to think that the road belongs entirely to him. Cross road cycle conferences have become a common feature in our cities. A number of cyclists gather at a road junction and go on talking they would not give way to a car which has to pass that way; they expect the driver to stop till their conversation is over or to somehow manoeuvre the car across the junction. This is their understanding of freedom! Is it not obvious that my freedom is conditioned by my neighbour's freedom? In fact my freedom is conditioned by the freedoms of all the people around me. To recognise this and live a life of amity, understanding and good will is elementary commonsense.

What distinguishes the man from the beast is that he recognises this universal interdependence and orders his life accordingly. He establishes conventions. mutual understanding, laws of conduct for the welfare of the society, thereby imposing restrictions on himself for the benefit of the whole. This is real Dharma. The more a person or a society advances in civilisation and culture the greater these mutual restrictions. The individual willingly accepts self-imposed restrictions for the sake of the progress of the society; he makes laws and statutes to which he subjects himself. We are sure a cultured person will not do this, that and the other thing, if these go against the mutual understanding he has established with others. In other words he lives a life of decipline.

This does not interfere with his inner freedom; in fact he uses his freedom to impose these restrictions on his own freedom. The highest freedom is the freedom to surrender our own personal freedom. If we are not free to surrender our freedom can we be said to be really free?

A little thought will show that the restriction of our freedom implied in any discipline is only apparent. It is really just the other way. Some thing attracts me, I am tempted to obtain and enjoy it. I am free to enjoy it and so I strive to get it for my enjoyment. I know that it is not helpful to my progress and still I seek the enjoyment of it. Another person, seeing that the object bars his progress, resists the temptation, in other words, imposes a restriction on himself not to yield to that temptation- this is really decepline. Which of these has really exercised his freedom? In one case I have become a slave to the desire, in the other case he has resisted the temptation of the object to enslave him. It is obvious that the discipline man has exercised his freedom while the undisciplined person has surrendered his freedom. Disciplined freedom alone is real freedom. When people talk about discipline as an inhibition curtailing one's freedom they miss an important psychological fact. Ordered outer discipline develops an inner strength which alone can ensure our being able to resist the allurements which all the time try to ensnare us, and thus makes for real freedom.

. . . . . . . . . . . . .

## கவனிக்கவும்.

அன்பு வாசகர்களே!
சிந்தனைபூர்வமாகவும்
சமூகத்தையும் சமயத்தையும்
இணைக்கும் பாலமாகவும்
படைப்புக்களை அனுப்புங்கள்.
தரமானவற்றைப் பிரசுரிப்போம்
-ஆசிரியர்-

## சக்தி

### -பாரதியார்-

துன்பமில்லாத நிலையே சக்தி
தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத் திருக்கும் எரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
முக்தி நிலையின் முடிவே சக்தி

First Authentic Dosai in Sri Lanka



Indian Vegetarian Restaurant with a homely atmosphere.

ShanmugaS
The Vegetarian Restaurant
53/3, Ramakrishna Road,
Colombo - 6, Tel : 587629, 598384
(near Roxy Theatre opposite Ramakrishna Hall)

# GNANAM
T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள்
மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**
**விரைவான சேவை!**
**தெளிவான சேவை!**

இவற்றுக்காக எங்கும் நீங்கள்
போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம்
தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள்**
**அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

**180 High Street North**
**East ham London**
**Tel: (+0044) 0181 47 08 84 4**
**Fax: (+0044) 0181 47 08 77 7**

| | |
|---|---|
| **Australia** | **5p** |
| **Canada** | **5p** |
| **France** | **5p** |
| **Germany** | **5p** |
| **India** | **25p** |
| **Italy** | **7p** |
| **Malaysia** | **14p** |
| **Pakistan** | **29p** |
| **Singapore** | **15p** |
| **Sri lanka** | **27p** |
| **U.K** | **3p** |
| **U.K mobile** | **11p** |

Yoge Empire Estates

4 For Sale



PROPERTIES URGENTLY REQUIRED
ALL AREAS, ESPECIALLY IN

East Ham Manor Park Upton Park Forest Gate
Stratford Barking Seven Kings Walthamstow
REDBRIDGE GANTSHILL NEWBURY PARK
WANSTEAD CLAYHALL Ilford

FREE VALUATIONS

Our staff are dedicated to providing a first class service to you at all times.

RUSH! SOLE AGENT 1%
MULTIPLE AGENCY 1.5%

CALL US NOW

0181-475 0015 (4 Lines)

297 High Street North, Manor Park, London E12

# கழகம் பெற்ற வாழ்வு

## புலோலிப் புலவர்

***மொழிப் பொருட் காரணம் விளிப்பத் தோன்றா*** என்பது தொல்காப்பிய நூற்பா. ஒரு சொல்லுக்கு அதன் பொருள் எப்படி வந்தது என்று சொல்லிக் கொள்ளுதல் இயலாது. ஒரு சொல்லின் பொருள், அச்சொல்லுக்கு நிலைத்து நிற்பதும் இல்லை. ஒரு சொல்லுக்குரிய பொருள் மாறி, அந்தச் சொல்லுக்கு, முதலிலிருந்த பொருளுக்கு நேர் மாறான பொருள் ஏற்படுதலும் உண்டு.

உதாரணமாக நாற்றம் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்.

**இணரூழ்த்தும் நாறா மலர் அனையர்**
**கற்றது உணர விரித்துரையாதார்**

என்பது திருக்குறள். இங்கே நாறு என்பது, வாசம் என்ற பொருளில் வந்திருக்கிறது. ஆனால் நாற்றம், நாறுதல், நாறுகின்றது, என்ற சொற்கள் இன்று மறுதலையான பொருளிலேயே பெரும்பாலும் கையாளப்படுகின்றன. அவருடைய அடுப்படிக்குப் போனேன் ஒரே நாற்றம். அவருடைய கழியலறையும், குளியறையும் நாறுகின்றன, என்ற சொற்றொடர்களில் நாறு என்ற அடிச்சொல் அதன் இயல் பிழந்து, வேறெரு பொருளேற்று, நிற்பதைக் காண்கின்றோம். மணம் என்ற சொல்லும் அவ்வாறே அதனது இயல்பான மூலக்கருத்தை இழந்து வழங்கிவருகின்றது. வீடு மணக்கும், உடுப்பு மணக்கும், என்றஞ்சி இலண்டன்வாழ் யாழ்ப்பாணத்தார் கறிகளைத் தாளிப்பதில்லை என்ற வாக்கியத்தில், மணக்கும் என்ற சொல், துர்நாற்றத்தைக் குறிக்கப் பயன்பட்டிருத்தல் காண்க.

கள் என்ற விகுதி பண்டைய நாட்களில் அஃறிணைப் பன்மையைச் சுட்டுவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. ஆடுகள், மாடுகள், பொருட்கள், கோவில்கள், சமயங்கள், பழங்கள், கருத்துக்கள் என்ற சொற்களில் கள் என்ற விகுதி பன்மை குறிக்கும் விகுதியாகவே ஆளப்பட்டிருப்பதைக் காணலாம். நான் என்ற சொல்லின் பன்மை நாம், நீ என்ற சொல்லின் பன்மை, நீர் அல்லது நீவீர், அவன் என்ற சொல்லின் பன்மை அவர், எவன் என்ற சொல்லின் பன்மை எவர், அடியவன் என்பதன் பன்மை அடியவர், தேவன் என்பதன் பன்மை தேவர், அதாவது, மேற்படி உயர்திணை ஒருமைச் சொற்கள், பன்மை குறிக்கும் போது கள் என்ற விகுதி இல்லாமல், அக்காலத்தில் அர், ஆர், இர், ஈர் என்ற விகுதி சேர்ந்து பன்மை குறித்தன. ஆனால் பிற்காலத்தில் கள் என்ற விகுதி, உயர்திணைச் சொற்களை மயக்கி, உயர்திணைக்குள்ளும் புகுந்துவிட்டது, அதனாலேதான், இன்று நாங்கள், நீங்கள், அவர்கள், எவர்கள், அடியவர்கள், தேவர்கள் என்று எழுதியும் பேசியும் வருகின்றோம்.

மூலப் பொருள் இழந்த சொற்களில் கழகம் என்ற தமிழ்ச் சொல்லும் ஒன்று. இன்று, பல்கலைக்கழகம், தமிழ்க்கழகம், புலவர்கழகம், அறிஞர் கழகம், கலைக்கழகம் என்றெல்லாம் எழுதுகின்றேம். அவ்வாறு எழுதும் போது, மன்றம், சங்கம், அமைப்பு என்ற பொருளிலேயே கழகம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம். ஆனால், சங்ககாலம் என்று சொல்லப்படுகின்ற காலத்தில் கழகம் என்ற சொல்லின் பொருள் வேறாக இருந்தது. அறிஞரும் ஆன்றோரும் சான்றோரும் வெறுக்கின்ற ஓர் இடத்தைக் குறிக்கவே கழகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. கழகம் என்ற சொல்லை வள்ளுவர், சூது என்ற அதிகாரத்தில் இரண்டு இடங்களில் எடுத்தாள்கின்றார். 935 ஆம், 937 ஆம் குறள்களில் கழகம் என்ற சொல்லை வள்ளுவர் எடுத்தாள்கின்றார்.

**கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார் (935)**

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
**கழகத்துக் காலை புகின் (937)**

என்பனவே அந்தக் குறள்கள். இக்குறட்களில், கழகம் என்ற சொல் சூதாடும் இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சான்றோர் கால் வைக்க நாணுகின்ற சூதாட்டிடத்தைக் குறிக்க அன்று பயன்படுத்தப்பட்ட சொல், இன்று, சான்றோரும் ஈன்றோரும் அடிக்கடி சந்திக்கின்ற இடமான கல்வி மன்றங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். என்னே மாற்றம்! வள்ளுவர் காலத்திலே சூதாட்டிடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட கழகம், கிபி. எட்டாம் நூற்றாண்டளவில் தன் மூலப் பொருளை இழந்து, கல்வி அரங்கைக் குறிக்கப் பயன்படுத்தப்படத் தொடங்கி விட்டது என்பதை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் காட்டுகின்றது.

**குழகி எங்கள் குழமணன்** கொண்டு

என்று தொடங்கும் திருவாய் மொழிப் பாடலின் ஈற்றடி **கழக மேறேல் நம்பீ, உனக்கும் இனைதே கன்மமே** என்ற அடிவருகின்றது. இங்கே கழகம் என்பது கல்வி அரங்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் மாபெரும் தமிழிலக்கியமான கம்பராமாயாணத்தில் கழகம் என்ற சொல், கல்வி பயிலும் இடத்தைக் குறிக்கப் பயன்பட்டிருக்கின்றது. கம்பராமாயாணம் நாட்டுப்படலத்தில் **கந்தனை அனையவர் கலைதெரி கழகம்** என்ற அடி வருகின்றது. அங்கே கழகம் என்ற சொல் கல்விக்கான கூடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

சொற் பொருளியல் என்ற Philology ஆகிய துறை ஆரா இன்பம் தரவல்ல ஒரு துறை. அந்தத் துறையில் குளிப்பது மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. அந்தப் பொழுது போக்கில் மனம் போக்குமாறு கலச வாசகர்களை அழைக்கின்றேன். வாருங்கள், என்னோடு சேர்ந்து, மொழியை அளைந்து விளையாடுங்கள்.



# நம்பிக்கை மலையையும் அசைக்கும்

இறை நம்பிக்கை மலையையும் அசைக்கும் என்பது வேதவாக்கு. ஆனால் எத்தனை பேர் அவ்வளவு தூரம் இறைவனை நம்புகிறார்கள் என்பது கேள்வி. இது இறைவன் நாமத்தில் பூரண நம்பிக்கை வைத்த ஒரு பெண்ணின் கதை.

அவள் பாவம் ஒரு பால் வியாபாரம் செய்பவள் அவள் தன் குருவிடம் அபார பக்தி வைத்திருந்தாள். அவர் சொல்வதெல்லாம் வேதவாக் குத்தான். அவள் ஒவ்வொருநாளும் அவளது குருவுக்குப் பால் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். ஆற்றுக்கப்பால் இருந்தது அவளது வீடு. இக்கரையில் குருவின் ஆசிரமம்.

ஒருநாள் தாமதமாக அவள் பால் கொண்டுவர நேரிட்டது. குருவுக்கோ மகா கோபம் வந்து விட்டது. ஏன் எவ்வளவு தாமதம்? இதுதானா உன் குரு பக்தி? என்று சீறி விழுந்தார் குருதேவர்.

நான் என்ன செய்ய சுவாமி. படகுக்காரன் குறித்த நேரத்துக்கு வருவதில்லையே என்றாள் சிஷ்யை.

குருவின் கோபம் தணியவில்லை. இறைவனின் நாமத்தைக் கூறியவண்ணம் இந்த சம்சாரசாகரத்தையே தாண்டி விடுகிறார்கள். அப்படியிருக்க நீ இறைவன் பெயரைக் கூறியவண்ணம் இந்த ஆற்றைத்தாண்ட முடியாதா? என்று கேட்டார் குரு.

சரி சுவாமி என்று கூறிவிட்டு அவள் போய்விட்டாள். மறுநாள் முதல் குருவுக்கு நேரத்திற்குப் பால் கொண்டு வந்தாள் அவள். இப்போ எப்படி நேரத்திற்கு உன்னால் பால் கொண்டு வரமுடிகிறது? என்று குரு கேட்டார்.

தங்கள் உபதேசம் சுவாமி இறைவனின் பெயரைக் கூறியவண்ணம் நான் ஆற்றின் மேல் நடந்தே வந்து விடுகிறேன் என்றாள். குருவுக்கு நம்பிக்கையில்லை. ஆற்றுக்கு அவளை அழைத்துச் சென்று அவளை நடக்கச் சொன்னார். அவள் ஆற்றின் மீது ஒய்யாரமாக நடந்து சென்றாள்.

சாதுவும் அவளைப் பின்பற்றி அந்த ஆழமான ஆற்றில் அடி எடுத்து வைத்தார். அவரால் நடக்கமுடியவில்லை. தண்ணீரில் மூழ்கிக்கொண்டே போனார். பால்காரி திரும்பிப் பார்த்தாள். சுவாமி எனக்குத்தான் உபதேசம் செய்தீர்கள் உங்களுக்கு இறைவனில் நம்பிக்கையில்லை. வேட்டியையும் மடித்துக்கட்டியுள்ளீர்கள். நீங்கள் ஆற்றில் மூழ்கிவிடுவீர்கள். தயவு செய்து திரும்புங்கள் என்று கூறிவிட்டு ஆற்றின் மேல் விரைந்தாள் அவள்.

நன்றி: வீரகேசரி

# வருங்கால சமுதாயமும் கோயில் வழிபாட்டு முறைகளும்

*– திருமுருகன்–*

*(லண்டனில் நடைபெற்ற சைவ மகாநாட்டின்போது ஆற்றப்பட்ட உரை)*

நாம் எல்லோரும் வருங்கால சமுதாயத்தின் மேம்பாட்டினைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறோம்! வருங்கால சமுதாயம் எனும்போது, எமக்கு அடுத்த தலைமுறையையும் அதற்கு அடுத்த தலைமுறையையும் கருத்திற் கொள்வதாக எண்ணியுள்ளேன்.

இதுவரை பல தினுசுகளில் பல வகையான பேச்சுக்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். சித்தாந்தத்தை அக்குவேறு ஆணிவேறாக்கி ஆகாயத்தில் நின்று அதியற்புதமாகப் பேச்சாளப் பெருமக்கள் பேசியுள்ளனர். நீங்களும் செவிமடுத்தீர்கள்.

எம் தமிழ் உறவுகளே தயவுசெய்து கீழே இறங்கி வாருங்கள். பேசிப் பேசி ரசித்துக் களைத்துப் போன இனம் எமதினம். நாம் பேசுவதில், கதைப்பதில் நடைமுறையில் எவ்வளவற்றை நிறைவேற்றுகின்றோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிள்ளைகளை நாம் குழப்பக்கூடாது. மிக அவதானமாக அவர்களை நாம் அணுகவேண்டும். ஒரு இனம் தன் விடுதலைக்காகப் போராடும்போது கலாசார தேக்கம் அல்லது சீரழிவு தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விடுகின்றது. குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் இக் கலாசாரப் போர் உக்கிரமாக நடைபெறுகின்றது என்பதை நாம் மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்குலக நாடுகளில் வாழும் பிள்ளைகள் சிந்திக்கும் தன்மை வாய்ந்தவர்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இன்று மேற்குலக நாடுகளில் உள்ள ஆலயங்களின் வரலாறுகளை பிள்ளைகளுக்கு எடுத்துக்கூற முடிவதில்லை. காரணம் ஆலய நிர்வாகத்தினர்களுக்கிடையில் நடைபெறும் அர்த்தமற்ற மோதல்கள் பிரிவாகி அந்தப் பிரிவி–ல், பல ஆலயங்கள் உருவானதுதான் வரலாறாக இருப்பதே.

ஆலய நிர்வாகிகளுக்கிடையில் நடைபெறும் தேர்தல்களில் பல பிரச்சினைகள் மோசமாக நடைபெறுவதையும் எமது பிள்ளைகள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் மறைத்து தங்களை பக்தர்களாக காட்டிக் கொள்வதற்காக கோவில் வழிபாட்டு முறைகளில் பழிபோடுகிறார்கள். தங்களைத் தாங்களே சீர்படுத்திக் கொள்ளமுடியாத பெற்றோர் எப்படி வருங்கால தலைமுறையை வழிநடத்த முடியும் என்பதொரு வினா! யதார்த்தத்தை மறந்து பொய்வேடம் போடுவதனால் எதனையும் சாதித்து விடமுடியாது. காலத்துக்குக் காலம் இவர் எழுப்புகின்ற கோஷங்களே பிள்ளைகளை ஆத்மீக வாழ் விலிருந்து திசைதிருப்புகின்றது என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் போர் இரண்டு எதிரிகளுக்கிடையில் இல்லாமல் நண்பர்களுக்கிடையிலேயே நடைபெறுகின்றது. அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில், தகப்பனுக்கும் பிள்ளைக்கு மிடையில் தாய்க்கும் மகனுக்கும் இடையில் சாவதானமாக நடைபெறுகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகளில் கலாசார அடையாளம் எம்சிறார்களிடையில் உடையில் காணமுடியாது. தமிழ் பேசுவதால் அவர்கள் தமிழர்கள் ஆவதில்லை. ஆகவும் முடியாது. வாழும் முறையைச் செம்மைப்படுத்துவதாலும் தமக்கென்றொரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்வதாலும் மட்டுமே அவர்கள் தமிழர்கள் ஆக முடியும். இந்த வாழும் முறை சமயத்தாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. இதனால் ஆத்மீக உணர்வை அவர்களிடம் கட்டிவளர்ப்பதே இன்றைய தேவையாக உள்ளது. இந்த ஆத்மீக வாழ்க்கை முறையை எப்படி அவர்களுக்கு வழங்கலாம்.

1. பெற்றார்கள் சமய நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

2. பெற்றார்கள் அன்பின் வழியைப் பிள்ளைகட்குக் கூறிவைக்க வேண்டும்.

*3.* பெற்றார்கள் பிள்ளைகட்குமுன்னுதாரணமாகத் திகழவேண்டும்.

இப்படி இருந்தால்தான் பிள்ளைகளை நாம் காப்பாற்ற முடியும். இந்த மூன்று நிலைகளினின்றும் தவறுகின்ற பெற்றோர் தங்கள் பிழைகளை மறைப்பதன் பொருட்டு கோயில் வழிபாடுகள் படு பிற்போக்குத்தனமானவை என்றும் அதனால் கோயில்களில் நடைபெறும் பூசைகளில் தமிழிலே அர்ச்சனை செய்யவேண்டும் என்றும் கோஷம் எழுப்புகிறார்கள். இன்றைக்கு அவர்கள் எழுப்பும் கோஷம் நிறைவேற்றப்பட்டால் எமது மூன்றாம் தலைமுறை ஆங்கிலத்தில் பூசை செய்யும்படி கேட்கும். அப்போது இந்தப் புண்ணியவான்கள் என்ன செய்யப்போகிறார்கள்? விளங்கவில்லை என்கின்றார்கள். இது மட்டுமா இவர்களுக்கு வாழ்க்கையில் விளங்கவில்லை? எத்தனையோ விளங்காத விடயங்களை இவர்கள் சமாளித்து நடக்கவில்லையா? கணித பாடம் படிக்கும் போது x plus x = 2x என்று படிக்கின்றோம். அங்கே ஏன் நாம் அ சக அ என்று போடக்கூடாது? அதைக் கேட்காதவர்கள், வெறும் கணிதத்திலேயே கேட்காத இவர்கள் பரமனுக்குச் செய்யும் பூசையில் மட்டும் ஏன் நுழைகிறார்கள் என்பது புரியவில்லை.

பூசைக்குரிய மொழி எதுவாகவும் இருந்துவிட்டுப்போகட்டும். இது எமக்கு இப்போதுள்ள பிரச்சினையில்லை. அதை மறந்து விடுங்கள்.

இவர்கள் வருங்கால சமுதாயத்தை எங்கள் எதிர்காலத் தமிழுறவுகளை நட்டாற்றில் விட்டுவிடும் கைங்கரியத்தை வெற்றிகரமாகச் செய்கிறார்கள்.

வெறுமனே வாக்குவாதப்படுவதை விட்டு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்திப்போம்.

வழிபாட்டு முறைகளில் கூட பல திருத்தங்கள் செய்யப்படத்தான் வேண்டும். வழிபாட்டுமுறைகள் இறைவனால் அறிமுகப்படுத்தப்பட்டவையல்ல. மனிதனால் உருவாக்கப்பட்டவைதான். இவற்றை காலகட்டத்துக்கு ஏற்றமாதிரி மாற்றம் செய்வதால் எவ்வித தவறுமேயில்லை. இதனால் ஐயோ சமயம் போய்விட்டதே என்று ஒப்பாரிவைப்பதும் நியாயமானதல்ல. அபிஷேகம் என்ற பெயரில் எத்தனையோ கலன் பால் வீணாக்கப்படுவதை வருங்கால தலைமுறை பார்த்துக் கொண்டிருக்காது . கடவுள் என்றைக்குமே அப்படிக் கேட்டதில்லை.

அர்ச்சனை என்ற பெயரில் அர்த்தமில்லாத செயல்கள் நடைபெறுவதை அவர்கள் தட்டிக் கேட்கும்போது நாம் பதில்களைத் தயாராக வைத்திருக்கவேண்டும் அல்லது கேள்விகள் வருமுன் மாற்றங்களை உருவாக்கவேண்டும். கிரியைகள் ஆத்மீகத்தை விளங்குவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அர்ச்சகருக்கு அர்ச்சகர், நாட்டுக்குநாடு கிராமத்துக்குக் கிராமம் எமது வழிபாட்டு முறைகள் மாறுபடுவதை நவீன கல்விபாடம் சிந்தனை மையமாக்கப்பட்ட வருங்கால சமுதாயம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒரு பெண் ஆண்டவனுக்குப் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்று அர்ச்சகர் நிறுத்துவதை வருங்கால சமுதாயம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது. அப்படியானால் நாம் என்ன செய்வது என்பதுதான் இப்போதுள்ள பிரச்சனை. மாற்றத்தான் வேண்டும். மாறத்தான் வேண்டும். அமைதியாக அவதானத்துடன் வருங்காலத் தலைமுறையைக் குழப்பாமல் நாம் மாறவேண்டும். மாற மறுத்தால் மாற்றவேண்டிய கடமை இளந்தலைமுறையிடம் சென்றுவிடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சமய வாழ்வு என்பது சமூக வாழ்வுதான் என்பதை பிள்ளைகட்கு சொல்லிக் கொடுங்கள். அன்பே சமயம் என்பதை நீங்கள் செய்து காட்டுங்கள். அவர்கள் செய்வார்கள். நீங்கள் சிந்தியுங்கள் அவர்கள் வழிகாட்டுவார்கள். ஏனென்றால் அவர்கள் மிகக் கெட்டிக்காரர்கள். கோபத்தை விடுங்கள் ஆணவத்தை ஒழியுங்கள். எம் தமிழுறவுகளே! நாளை மலரப்போகும் எம் திருநாட்டுக்கு நற்புத்திரர்கள்வேண்டும்.அவர்களை ஆத்மீகத்தின் துணையோடு கட்டியெழுப்புங்கள். வருகிறேன். வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**வாழ்க தமிழ்மண்.**

**வளர்க தமிழ்மதம்.**



# சிறுவர் கலசம்

## வணக்கம்!

## பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 26ஆவது இதழ். கட்டுரைப்போட்டியில் பங்குபற்றிய உங்களில் பலர் பரிசில்கள் பெற்றுமகிழ்ந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. நன்றி. இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பல கட்டுரைகளை உமக்குத் தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. தமிழ்க் கட்டுரைகளைப் புரிந்து கொள்ளாவிடின் உங்கள் பெற்றாரை அணுகிக் கேளுங்கள். அல்லது எமக்கு எழுதுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றோம். நீங்களும் எங்களுக்குக் கட்டுரைகள் அனுப்பவேண்டும். இம் முறை துளசி எனும் பெண்மகள் எழுதிய கட்டுரை பெரியவர்களின் சிந்தனைகளைத் தட்டியெழுப்பக் கூடியதாக அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் The Tiger and The Jakel என்கின்ற கதையொன்றைப்போட்டுள்ளேன். இது நல்லதொரு அறிவுரையை உங்களுக்கு வழங்குகின்றது.

உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள்.

சிறுவர்களே மேலும் மேலும் எழுதுங்கள். தமிழில்தான் எழுதவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நீங்கள் தமிழர்களாக வாழவேண்டுமென்பதுதான் எமது அவா.

–ஆசிரியர்–

# விழிப்போமா?

**–துளசி மகேஸ்வரன்–**

(இப் பேச்சு கலசத்தின் 25ஆவது இதழ் வெளியீட்டின்போது செல்வி துளசி மகேஸ்வரன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.)

## வணக்கம்

கலச விழாக்காண்பதற்காய்க் குவிந்திருக்கும் பெரியோரே! கலசவிழா நிகழ்ச்சியிலே இடம் பெறும் பட்டிமன்றத்திலும் கவியரங்கத்திலும் அலசவென்று வந்திருக்கின்ற அறிஞர்களே, கவிஞர்களே! பரதநாட்டியம் பார்க்கத் துடித்து நிற்கும் இளைஞர்களே, நண்பர்களே! எல்லோருக்கும் என் வணக்கம்.

இருபத்தைந்தாவது கலச மலர் வெளியீட்டுவிழா இன்று நடைபெறுகின்றது. இந்தப் பெரிய வெளியிட்டு விழாவிலே கலந்து கொள்வதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். ஒரு சஞ்சிகையை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது என்பது இலேசான காரியமல்ல. இந்த நாட்டில் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் காளான் போல் தோன்றி மழைக் குமிழிபோல மறைந்த ஏடுகளும் சஞ்சிகைகளும் ஏராளம். அந்த வகையில் பார்க்கின்ற போது எதிர் நீச்சல் போட்டுத் தழைத்து வருகின்ற கலசத்தையும் அதன் ஆசிரியரான நற்குணதயாளன் அவர்களையும், சைவ முன்னேற்றச் சங்கத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

கலச மலர் பற்றி விமர்சிப்பது அல்ல எனது நோக்கம். அது பெரியவர்களின் விஷயம். ஆகவே அதை அந்தப் பெரியவர்களிடம் விட்டுவிடுவோம். இந்த நாட்டில் வாழுகின்ற இளைஞரின் நலனுக்காக சிறுவருக்கென்றே சில கட்டுரைகளையும், வெறும் ஆக்கங்களையும் கலசத்தார் வெளியிட்டு வருகின்றார்கள். இந்தக் கட்டுரைகளில் சில ஆங்கிலத்திலும் வேறு சில தமிழ் மொழியிலும் வெளிமிடப்படுகின்றன.

சிறுவர்க்கான பகுதியில் இடம்பெறும் ஆக்கங்கள் பல பெரியவர்களால் எழுதப்படுகின்றன. கலசத்தாரின் இந்த நல்ல நோக்கத்தையும் முயற்சியையும் நான் பாராட்டுகிறேன். ஆனாலும் கடந்த கால கலச இதழ்களைப் புரட்டிப் பார்க்கின்ற போது, இளைஞர்களின் பங்கு, அவர்களின் ஈடுபாடு போதியதாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எம்போன்ற சிறுவர்களுக்கு எமது மதத்தைப் பற்றியும், மொழியைப்பற்றியும் அறிவித்து தெரிவித்து, எங்களையெல்லாம் தமிழ் மொழிக்குள்ளும், தமிழ்க்கலைக்குள்ளும் தமிழ் நெறிக்குள்ளும் நிறுத்த வேண்டிய பணி, எமது பெற்றோரை மட்டும் சார்ந்ததென்று எண்ணி விடக்கூடாது. சமயத்தின் பேரிலும், தமிழ் மொழியின் பேரிலும் கலைகளின் பேரிலும் மன்றங்களும் சங்கங்களும் அமைத்துப் பொருளீட்டுவதோடு பெயரும் புகழும் ஈட்டுகின்ற மற்றவர்களுக்கும் இப்படியான ஒரு வரலாற்றுக் கடமை உண்டு. சிறுவர்கள் தமிழ்

படிக்கிறார்களில்லை, கோயிலுக்கு வருகிறார்களில்லை, தேவாரம் படிக்கிறார்களில்லை என்று சாக்குப் போக்கு சொல்லுவது பெற்றோருக்கு வசதியாக இருக்கலாம். ஆனால் அது நல்ல ஒரு போக்கல்ல. எனது பிள்ளை நாளைக்கு தமிழனாக வாழப் போகிறானா? அல்லது தமிழிச்சியாக வாழப்போகிறாளா? என்ற கேள்வியைப் பெற்றோராகிய நீங்கள் எல்லோரும் உங்களுக்குள் கேட்க வேண்டும். எனது பிள்ளை பட்டம் பெற்றுப் பதவி பெற்றால் போதும், மற்றப்படி எப்படிப் போனாலும் பரவாயில்லை என்று எண்ணுவது விபரீதம்.

தமிழ்ச்சிறார்களின் எதிர்காலம் பற்றிச் சதாகாலமும் எண்ணிக்கொண்டிருக்கின்ற சைவ முன்னேற்றச் சங்கம் என்போன்ற இளைஞர்களைக் கவரக்கூடிய வகையில் நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு, என்போன்றோர் எழுத்திலும், பேச்சிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை மேலும் வழங்குதல் வேண்டும். கடவுளின் பேரில் கட்டடங்களை வாங்கிக் கடவுளையும் கடனாளியாக்கி வருகின்ற சில கோவில்காரருக்கு அறிவுச்சுடர் கொளுத்தி அவர்களையும் தமிழ்ப்பணியும் கலைப் பணியும் செய்யுமாறு ஊக்குதல் கலசத்தாரின் கடன். அவர்களால் முடியும். இளஞ்சிறார்களை, தமிழ்ச் சிறுவர்களை, இந்துத் தமிழர்களை இன்று இலண்டனிலே புற்றீசல் போலக் கிளம்பிக் கொண்டிருக்கின்ற கோயில்களோ, தமிழ் மன்றங்களோ, சமயத்தாபனங்களோ கவரத் தவறினால் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் அதாவது இன்றிருக்கும்

பெரியவர்கள் மடிந்தபிறகு, இந்தக் கோவில்களுக்கு யார் போகப் போகின்றார்கள்? தமிழ்க் கல்லூரிகளில் யார் படிக்கப் போகின்றார்கள்? கலசம்தான் வெளி வருவ தற்கான வாய்ப்போ அவசியமோ இருக்குமா? சைவக் கோயில்களை அடித்துப் பூட்டிவிட்டு கோடிக்கணக்கில் செலவிட்டுக் கட்டிய கோயிற் கட்டடங்களை வேற்று மதத்தவர்கட்கு விற்க வேண்டிய நிலை ஏற்படலாம். இன்று கோவிலில் தீபம் காட்டுகின்ற ஐயர்மாரும் அடியார்களும்கூட பெற்றோல் செட்டிலும் சுப்பர் மார்க் கெட்டிலும் வேலை செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம். அந்த நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டுமானால்இன்றே விழித்துக் கொள்ள வேண்டும். விழிப்போமா? அல்லது தமிழரின் மொழி என்ற விழி- போமா?

## சிறுவர் வரைந்த சித்திரங்கள்



# The Word Ganapathi

In the word Ganapathy, the syllable **Ga** represents Buddhi (the intellect) and the sullable **Na** signifies wisdom(Jnana). Therefore Ganapathi means lord of the intellect and wisdom. To worship the intellect and wisdom is one form of worship of Ganapathi.

Ganapathi represents the combination of great energy. This is why the name Ganapathi is appropriate for him. He is the Lord of all the celestial ghosts (Ganas). This is why he is known as Ganapathi.

Another name for Ganapathi is Vinayaka. Vinayaka is known for his high intelligence. The very sight of his figure gives joy to many. He has a big belly, beautiful tusks, penetrating eyes, handsome ears. All of these are harmoniously balanced to produce an attractive form.

**-Mayooran Perinpanathan-**



# The Tiger and The Jackal.

A hunter went to a forest to hunt. He used his bow and arrows to shoot the wild animals. He hunted vigorously. In short time he had killed several animals. The wild animals were filled with great fear. They were running in all directions to escape from danger.

A fierce tiger was looking on, he said to the fleeing animals ,"Don't be afraid of the hunter, I shall kill him or drive him out of the forest. Then you can live peacefully.

Just as he had finished saying these brave words, a sharp arrow flew straight, pierced through the ribs of the tiger and got struck there. The tiger fell down profusely bleeding.

A jackal which was standing near ridiculed the tiger. He said, " Oh tiger, what do you think of the power of our foe? Do not under estimate the enemy's prowess"

Do not under estimate other's strength. Do not over estimate your own strength.



## SHOULD THERE BE A SHIFT IN THE WAY EXILE CHILDREN ARE BROUGHT UP?

**-Suhanya Sivagurunathapillai-**

Before we answer this quesrion let us take a moment to try an understand what it means to be an exile child. To be exiled is to be away from your home for a long period of time and in most cases indefinitely. Imagine a blind man who has for the whole of his life lived only inside his house, he knows every small detail and is able to move comfortably in his surroundings. Now imagine that this blind man is plucked from his home and is placed in the centre of London. He will be surrounded by new sensations he will be completely lost and he would have no sense of direction. This is what it would be like for a child to be exiled from their country,......their home.

Children in this western society will be exposed to new freedoms. Western society gives far more freedom to their youth and is far more open to discuss topics such as drugs and sex. Asian societies are far more restrictive and protective of their youth. If we are to bring up our children in this country in this environment you as parents must adopt a strategy that incorporates both the openness of the western society and the protectiveness of the Asian society.

If we then wish our culture to survive you as parents need to educate your children. Culture isn't about how many arrengetrums your child achieves or the wining of numerous competitions in Tamil speaking. Tamil culture is about who we are, where we come from and what we are about. You cannot expect your children to keep the culture alive if you yourselves, as parents, are not doing so. Parents should not be forcing the children to attend Tamil schools or performances. The children themselves will want to attend these activities if encouraged by their parents. Children need to be fed with knowledge not with negative critisism, if they like the taste they will ask for more. It is up to the parents to make our culture appealing to the child. How many of us know what the traditional English breakfast is? How many of us know what the traditional Tamil breakfast is? How many of us will know how to prepare the traditional Tamil break fast? Do we wear our traditional clothes, at least to our own functions? Do we wear a potu? How many of us know the meaning of a potu? More western people are now beginning to wear potu.

Parents are now beginning to face the problem of their children finding partners. Parents are expecting their children to choose partners form their own community. How can this be expected when the child was brought up in an environment where their friends were going out and they were not. Their friends would have been seen going out with the opposite gender but they them selves would not be permitted to do so. I am not suggesting that we act like Roman's when in Rome, I am merely suggesting that we adjust so that the parents and children can live in harmony. Children who have been restricted are now finding new freedom when they attend university. Here they are most likely to find their partners and most partners that they find are from different communities and this often upsets the parents. This brings an unnecessary barrier between the child and the parent. The parents upbringing will determine the type of partner that is chosen. If the children are free to talk about such issues with their parents this sort of misunderstanding is less likely to occur. It is also more likely that our culture will continue through younger generations

Parents themselves have changed the way they live, they are not living how their parents did back in Sri Lanka. It is therefore understandable that the upbringing of children will too experience a shift. It is up to the parents to change. ♥

# 11 வயதிற்கும் 18 வயதிற்கும் உள்ள குழந்தைகளைத் திருதியெடுப்பபது எப்படி?

-க. சிவகுருநாதபிள்ளை-

முதலில் இவர்கள் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். அதற்குரிய வழிகளைப் பெற்றோர்களாகிய நாம் முதலில் கவனிக்க வேண்டும். நம் ஊரில் இருக்கும் யாழ் இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, வைதீஸ்வராக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் சமயப் பெரியார்களின் பேச்சுக்கள் யோகிகளின் உபதேசங்கள் அந்தர் யோக வகுப்புகள் யோகாசன வகுப்புகள் நடந்திருந்தமை அப்பள்ளிகளின் பழைய மாண வர்களாக இருந்த நம்மில் சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். இவற்றையெல்லாம் வாலிபர்களாகிய எமக்கு நற்சிந்தனையை வளர்க்க அப்பள்ளிகளின் அதிபர்பளால் எமக்கு அளிக்கப்பட்டவை. யோகிகள் ஞானிகள் வந்தபோதெல்லாம் இப்பள்ளிகளுக்கு அவ்வதிபர்கள் அழைக்காமல் விடுவதில்லை.

**இங்குள்ள சில சமய ஸ்தாபனங்கள் நம்மூரில் நாம் செய்து பார்த்த திரு விழாக்களின் மாதிரித் திருவிழாவை இங்கு செய்து பார்த்துத் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொள்கிறார்கள்.**

ஒரு சில பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாக இருந்த யோகிராஜ் சச்சிதானந்தா ஆதீன சுவாமிகள் பள்ளிகளில் பொது சனசமூக நிலையங்களில் யோகாசன வகுப்புகள், அந்தர் யோக வகுப்புகள் நடத்தியமை நம்மில் பலருக்கு தற்போது நினைவிருக்கலாம் சிலர் பங்குபற்றி நலனைப்பெற்று தற்போது மறந்தும் இருக்கலாம். இங்கும் கூட காலாகாலங்களில் இவ்வசதிகள் உண்டு. இன்றும் இந்நாட்டிற்கு இப்படிப்பட்ட ஞானிகள் வந்துபோகிறார்கள். வகுப் புகள் நடத்துகிறார்கள். சிலகுடும்பத்தினர் தாமும் குழந்தைகளுடன் ஞானிகள் உள்ள ஊர்களுக்குச் சென்று ஆச்சிரம வாழ்க்கை முறையை வருடத்தில் ஒரு தடவையோ அல்லது சில வருடங்களுக்கு ஒரு முறையோ போய்வருவதை நாம் காணலாம். நம்மில் ஒரு சிலர் நம்பிக்கை வைத்துத் தம்குழந்தைகள் பலன் அடைவதைக் காணுகிறார்கள். நாம் லௌகீக வாழ்கையில் இழக்கும் நமது தெய்வீக சக்தியை இவ்வாறான இடங்களுக்குச் சென்று தெய்வ சக்தியை ஊட்டிக் (சார்ஜ் பண்ணிக்) கொண்டு வரவேண்டும். மனவலிமை, ஆரோக்கியம், தன்னம்பிக்கை ஆகியனவற்றை இவ்வாறுதான் வளரக்க முடியும் என்பது நம்முன்னோர் கண்ட உண்மை. இதனை நமது இதிகாசங்களாகிய மகாபாரதம் இராமாயணம் ஆகியனவற்றில் குருகுல வாழ்க்கையினால் அடைந்த நற்பலன்களை அறியலாம். கோவில்கள் பல கட்டி சங்கங்கள் பல உருவாக்கி பக்தியை நமது பழக்க வழக்கங்களை வளர்ந்துவரும் இளம் சமுதாயத்தினருக்கு முழுமையாக அளிக்க முடியாது. நம்மில் ஒருசிலருக்குக் குருகுல வாழ்க்கையில் நம்பிக்கையும் இல்லை அதில் குழந்தைகளை ஈடுபடுத்தவும் ஆர்வம் இல்லை. இன்றைய நமது குழந்தைகளுக்கு இது மிக முக்கியமாக இருக்கிறது. குரு மரியாதை குரு வணக்கம் நம்மவரிடையே அதுவும் இந்நாட்டில் வாழும் எமக்குக் குறைந்து கொண்டு வருகிறது. இங்குள்ள சில சமய ஸ்தாபனங்கள் நம்மூரில் நாம் செய்து பார்த்த திருவிழாக்களின் மாதிரித் திருவிழாவை இங்கு செய்து பார்த்துத் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொள்கிறார்கள். இளம் சமூகத்தினருக்கு இதன் தத்துவத்தையோ கருத்தையோ தெரியப்படுத்த முயலுவதில்லை. சிலருக்கு தத்துவமும் தெரியாது அதை அறியும் ஆர்வமும் இல்லை. இச்சம்பிரதாயங்களின் தத்துவத்தை இளம் சமுதாயத்தினருக்குத் தெரியப்படுத்தாத இடத்து நாம் இன்று ஓடி ஓடிக் கட்டும் கோவில்கள் போவார் அற்று இன்றைய கிறீஸ்த்தவ கோவில்களின் நிலையை காலாகாலத்தில் அடையும் என்பதில் ஐயம் இல்லை.

நம் குழந்தைகளுக்கு மனவலிமை உடல்வலிமை ஆகியனவற்றை கொடுப்பது பெற்றோர் ஆகிய நம்மவரின் கடமை. உடலைக் கட்டுப்படுத்த

யோகாசனமும் மனதைக்கட்டுப்படுத்தி வழிநடத்த பிரார்த்தனையும் நமக்கு முக்கியம். உடலைக் கட்டுப்படுத்த மனம் தானாகவே கட்டுப்படும். வேகமாக ஓடும் மோட்டார் வாகனத்தின் வேகத்தைக் குறைக்க அதன் சக்கரங்களில் அமுக்கத்தைக் கொடுக்கிறோம். மோட்டார் யந்திரத்தின் சுழற்சி வேகம் தானாகவே குறைகிறது. யோகாசனத்தின் மூலம் உடலைக்கட்டுப்படுத்த வேகமாக அலையும் மனதின் வேகம் தானாகவே குறைந்து நமது கட்டுப்பட்டிற்குள் வரும். யந்திரத்திற்கு அமுக்கம் கொடுத்து நிறுத்தினால் அது உடைந்து விடும். இளம் தலைமுறையினரை அடித்து வளர்க்கலாம் என்று எண்ணினால் அவர்களுக்கும் எமக்கும் உள்ள உறவு முறிந்துவிடும்.

நமது குழந்தைகளுக்கு இங்கு வந்து போகும் பெரியவர்களைச் சந்தித்துப் பேசப்பண்ண வேண்டும். ஞானிகளைப் பார்க்க வேண்டும். ஆச்சிரமங்களுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். ஆச்சிரம வாழ்க்கையில் நீங்களும் குழந்தைகளும் பங்கு கொள்ள வேண்டும். ஞானிகளை உங்கள் இல்லத்திற்கு அழைத்து குடும்பமாக இருந்து பேசவேண்டும். இவ்வழியில் நமது குழந்தைகளை நமது பண்பாட்டின்படி வளர்க்க முடியும் என்பதில் ஐயமில்லை. நம்குழந்தைகள் ரோஜாக்கள். நல்ல எண்ணங்களைக் கொடுத்தால் நல்ல மணமுள்ள மலராக இருப்பார்கள். நல்ல எண்ணங்களையும் சிந்தனையையும் கொடுத்து வளர்ப்பது நமது கடமை. இது தமிழன் ஒவ்வொருத்தரினது முக்கிய குறிக்கோளுமாக வேண்டும்.

## நான் ஏன் கோயிலுக்குப் போகின்றேன்?

நாம் எல்லோரும் கடவுளை வணங்குவதற்காகக் கோயிலுக்குப் போகிறோம். ஒரு வரிப் பதிலுக்காகவா இந்தக் கேள்வி என்று யோசித்தேன். கோயிலுக்குப் போனால் எமது தேவைகளைக் கேட்டால் கடவுள் செய்வார் என்பதற்காகவா என்றும் நினைத்தேன். எமது பெற்றோரே நாம் கேட்காமல் எமது தேவைகளை நிறைவேற்றும்பொழுது உலகத்திற்கே தாய் தந்தையரான கடவுளிடம் நாம் கேட்டு எமது தேவைகளை நிறைவேற்றவேண்டியதில்லையே! நிட்சயமாக வேறு ஏதோ பதில் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்து பலரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டபொழுது எனது சின்ன மூளைக்குச் சில விடயங்கள் தெளிவாகியது.


நாம் பாடசாலைக்குப் படிப்பதற்கும் கடைகளுக்குப் பொருட்களை வாங்குவதற்கும் செல்வதுபோல கோயிலுக்குச் செல்வதற்கும் ஒரு நோக்கம் உண்டு. அதே சமயம் நான் கோயிலுக்குச் செல்லும்பொழுது மனது நிறைவாகவும் சந்தோசமாகவும் இருக்கும். வீட்டில் இருந்தும் கடவுளை வணங்கலாம். ஆனால் சிறுவர்களாகிய எம்மைை வழிநடத்த எமது பெற்றோரும் ஆசிரியர்களும் எவ்வளவு அவசியமோ அதேபோல் மனதை நல்வழிப்படுத்தி நல்ல பிள்ளைகளாகவும் எதிர் காலத்தில் சமுதாயத்தில் நல்ல மனிதர்களாகவும் வாழ்வதற்கு கோயில்களும் அங்கிருக்கும் கடவுள் சிலைகளும் சிற்பங்களும் பஜனை கூட்டுப் பிரார்த்தனை போன்றவையும் அவ சியமாகின்றது.

எமது மனம் தூய்மையானதாக இருந்தால் நாம் நினைப்பதை எம்மால் சாதிக்க முடியும். எமது செயல் சிந்தனைகள் மற்றவர்களை பாதிக்காது. மனதை நல்ல வழிப்படுத்தாதவர்கள் உலகில் குற்றவாளிகளாகவும் கொலையாளிகளாகவும் இருக்கின்றனர். இந்த உலகில் சிறைச்சாலைகளை நிரப்புபவர்களும் இவர்கள்தான்.

சிலர் ஒருவரும் காணவில்லை என்று எண்ணிப் பல கெட்ட செயல்களை செய்கின்றான். ஆனால் எமது உள்ளத்தின் உணர்வாக இருக்கும் இறைவன் எம்மைக் கவனித் துக் கொண்டேயிருக்கின்றான்.

பொதுவாக நாம் அனைவரும் பிறர் நம்மை மதிக்கவேண்டும் என்று விரும்புகின்றோம். மற்றவர்களுக்கு நம் குறைகள் குற்றங்கள் தெரிந்துவிடக்கூடாது என்றும் நினைக்கின்றோம். இதனால் நம்மை எவரும் பார்க்கவில்லை தீய செயல்களை இப்போது செய்தால் யாரும் அறியமாட்டார்கள் என்று நினைத்துப் பயமின்றி துணிந்து செய்கின்றோம். இந்த நினைவால் எத்தனையோ கெட்ட செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் கெட்ட செயல்களைச் செய்யும்பொழுது கடவுள் ஒருவர் இருக்கின்றார் அவர் எம்மைக் கவனிக்கிறார் என்று நாம் நினைத்தால் இப்படியான செயல்களைச் செய்யும் எண்ணம் ஏற்படாது. இதனால்தான் சிறியவர்களும் பெரியோரும் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மனதை நல்வழிப்படுத்தி எம்மைத் தூய்மையாக்குகின்றது. உயிர் வாழ்வதற்கு சுவாசிப்பது எத்தனை அவசியமோ அதைப்போல நல்ல மனிதர்களை உருவாக்க கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவதும் அவசியமாகின்றது. கத்தி தீட்டத்தீட்டக் கூராவதுபோல் கடவுளை வணங்க வணங்க நாம் தூய்மையானவர்களாகின்றோம்

**சோபியா இராசேந்திரன்**


First century B.C. Month of Vaikasi , Next to fullmoon day. A male child was born in Mayilapur in Tamilnadu. Themizhavel occupying the post of Valluvar (chambertain) under Pandyan king at Madurai and his relative named him as Valluvan and Myilaikizhar and his wife immersed in joy.
THIRUVALLUVAR
The youth grew as student. farmer and soldier


While returning from a battlefield, Valluvan met Vasuki, daughter of the Vazhithunaivar of Kavithipekkam owing thousand ploughs. Both fell in love and the marriage was solemnized.
A beautiful daughter was born. They named her Mullai and brought her up with loving care.
As soon as she awoke at dawn, Vasuki worshipped her husband without worshiping other Gods.
"Oh, dear, what is the purpose of domestic life?
To give to the poor and live in fame. It is my principle
Dear, say it is our principle

# இலக்கியம் காட்டும் காட்சி

செ. சிறிக்கந்தராசா

கல்தோன்றி மண்தோன்றாக் கால த்தே வானொடு முன்தோன்றி மூத்தகுடி என்று தமிழரைப்பற்றித் தமழிலக்கியங்கள் கூறியுள்ளன. ஓரள வுக்கேனும் மிகைபடச் சொல்லப் பட்ட கூற்றேயானாலும் தமிழரும் தமிழ் மொழியும், தமிழிலக்கியமும் தொன்மையானவை என்பதை மறுப்பதற்கில்லை. தமிழரின் இலக்கிய வளமோ, இலக்கண நுணுக்கமோ கலைகளின் ஆழமோ உலகத்தின் எந்தமொழிக்கும் குறைந்தனவல்ல. சொல்லப் போனால் மற்றமொழிகள் தமிழ் மொழியி டமிருந்து இரவல் வாங்கும் நிலையில்தான் இன்றும் உள்ளன. இவ்வாறாகப் பழமையும் செழு மையும் வளமையும் உள்ள தாக இருந்தும் தமிழ்க்கலைகள் பற் றியோ தமிழிலக்கியங்கள் பற்றியோ உலகத்தவர்க்கு இன்னமும் நன்கு தெரியாது. இந்துஸ்தானி இசை யைப் பற்றி மேற்கு நாட்டவர்கள் அறிந்திருக்கின்ற அளவுக்குக் கர்நாடக இசையைப்பற்றி மேற்கு நாட்டவர்கள் அறிந்திருக்கவில் லை. கதக் நாட்டியம் பற்றி மேற்குலகம் நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. ஆனால் பரத நாட்டியம் பற்றி வெள்ளையருக்கு அதிகம் தெரியாது. சீனருடைய கவிதையையும் இலக்கியத்தையும் இரசிக்கின்ற உலகம் தமிழரின் எட்டுத் தொகை பற்றியோ பத்துப் பாட்டுப் பற்றியோ பேசக் காணோம்! காரணம் என்ன? திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்று பாரதி பாடினான். வெளிநாட்டவர் வணக்கம் செய்யவில்லைத் தமிழரின் கவிதை களையும் காப்பியங்களையும். அப் படியானால் தமிழரின் கவிதைகளில் புலமை இல்லையா! கவித்துவம் இல்லையா! யார் சொன்னது? நிறையப்புலமை இருக்கிறது நிறை ந்த கவித்துவம் இருக்கிறது, குறுந்தொகையிலும் நற்றிணை யிலும் அகநானூற்றிலும் புறநா னூற்றிலும் நிறைய இருக்கிறது. உலகத்து இலக்கியங்களோடு, தோளோடு தோள் நின்று, அவற்றை யெல்லாம் மழுங்கடிக்கக் கூடிய கவித்துவமும் கவிப்பண்பும், தமிழி லக்கியத்துக்கு உண்டு. ஆனாலும், இன்றுவரை, தமிழிலக் கியத்தை வெளிநாட்டார் மதிக்க வில்லை, போற்றவில்லை. இதற் குக் காரணம் நமது தமிழிலக் கியத்தின் குறையல்ல, அது தமிழரின்குறை, வியாபாரத்துக்கு அழகு விளம்பரம் செய்தல் என்று வாயோயாமல் சொல்லுகின்ற நாங்கள், தன்னைப் புகழ்தலும் தகும் தக்கோர்க்கே என்ற நன்நூல் சூத்திரத்தை மறக்காத நாங்கள் எங்களுடைய இலக்கியத்தை வேற்றினத்தார் மத்தியில் பரப்பாதது எமது குறை மட்டுமல்ல, பெரிய தவறும் கூட.

ஒருசில வாரங்களுக்கு முன்னர், எனது வெள்ளைக்கார நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்த போது, தமிழ் மொழியைப் பற்றியும் பேச்சு வந்தது. இன்று வாழும் உலக மொழிகளில் தமிழ்மொழி இலக்கியத்துக்கு ஒப்பான கவிதை இலக்கியம் வேறெங்கும் கிடை யாது என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டேன். அந்தச் சொற் களை அந்த வெள்ளை அன்பரால் சீரணிக்கமுடியவில்லை. முன்பின் யோசியாமல் பகடியா விடுகிறாய் என்று அவரும் கேட்டுவிட்டார். அப்படிக் கேட்டதோடு நில்லாமல் நீர் சொல்வது உண்மையானால் உமது தமிழிலக்கியக் கவிதையில் இருக்கும் கவிதைப் பண்பையும், கற்பனை ஆற்றலையும் விளக்கும் ஒரு கவிதைப் பொருளைச் சொல் பார்க்கலாம் என்று சவாலும் விட்டுவிட்டார். அவர் இப்படி ஓங்கி அறைவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியி லிருந்து விடுபட ஓரிரு நிமிடங்கள் ஆகின. யோசித்தேன் எதைச் சொல்வதென்று! கம்பனைச் சொல் லவா, கபிலனைச் சொல்லவா, கூத்தனைச் சொல்லவா காளமே கனைச் சொல்லவா? அவ்வையைச் சொல்லவா அரிசில் கிழாரைச் சொல்லவா? என்று பலவாறு யோசித்தேன். கவிஞரைப்பற்றிச் சொல்லி என்ன? கவிதை யைத்தானே கேட்கிறார் என்ற முடிவுக்கு வந்தவனாகி, காதல் கவிதை ஒன்றின் பொருளைச் சொன்னேன் அவருக்கு. அந்தக் கவிதையின் கதை இதுதான், நீங்களும் கேளுங்கள்.

முல்லையும் குறிஞ்சியும் முறை மையில் திரிந்து நல்லியல்பிழந்து நடுங்கு துயருறுத்தும் பாலை நிலக்கிராமத்து வாழ்விலே நடந்த ஒரு கதை இது. அன்பே காரணமாக ஒரு பெண்ணும் ஓர் ஆணும் அன்பாகப் பழகினார்கள், ஒருவரை ஒருவர் விரும்பிக் கொண்டார்கள். தமது காதல் பற்றிப் பெற்றோரிடம் சொல் வதற்குத் தைரியம் வரவில்லை. அதற்கிடையில், பொருள்தேட வேண்டும் என்பதற்காக வெளிநாடு செல்லத் தயாராகிறான் அந்தக் காதலன். தனது எண்ணத்தைக் காதலியிடம் தெரிவித்தான். காதலி தவித்தாள், தடுமாறினாள். பயணத்

தைக் கைவிடும்படி வேண்டினாள், மன்றாடினாள். அவன் மசிய வில்லை. ஓடோடிப்போய் ஒரு கணமும் சுணங்காமல் வந்து விடுவேன் என்று ஆறுதலும் தேறுதலும் சொன்னான் காதலன்.

நிலைமை மோசமடைவதைக் கண்ட காதலி, கெஞ்சுவதை நிறுத்திவிட்டு, சற்றே மிஞ்சிய குரலில் பேசத் தொடங்கினாள். பாலையூர் ஊர்த்தலைவனின் மகன் நீங்கள். உங்கள் காடுகளில் வாழுகின்ற மிருகங்களுக்கு இருக்கின்ற உணர்வுகூட உங்களுக்கு இல்லை. அன்றொருநாள் வேட்டை ஆடப்போன எனது அப்பாவுடன் வேடிக்கை பார்க்க என நானும் காட்டுக்குப் போயிருந்தேன். இரவிரவாக அலைந்தோம். ஒருமிருகமும் தென்படவில்லை. காடோ நிலா எறிக்கும் இரவிலும் கனல் கக்கிக் கொண்டிருந்தது. வியர்த்துக் கொட்டியது. தண்ணீர்விடாய் எடுத்தது. கோடைக்காலமாதலால் ஒரு சிறங்கை தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை. ஆகவே சேறும் கலங்கலுமாகக் கிடந்த ஒரு குளத்துக்கருகே இருந்த பற்றையிலே மறைந்திருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு மூலையில் இலைகள் சரசரத்தன, திரும்பினேன். இரண்டு மான்கள், ஓசைப்படாமல் அந்தக் குளத்தருகே வந்தன.

வந்த அவை சடக்கென நின்றன. நின்று தண்ணீரைப் பார்த்தன.

பார்த்தபடியே நின்றன, நின்று யோசித்தன. ஒரு குழந்தைக்கே போதாத நீரை. இரண்டு மான்கள் அல்லவா குடிக்க வந்திருக்கின்றோம் என்று ஒவ்வொரு மானும் தத்தமக்குள் எண்ணின. அந்த மான்களோ இணைபிரியாத ஆணும் பெண்ணும் பிரியோம், பிரிந்தால் உயிர்தரியோம் என்ற கொள்கை கொண்டவை. பொறாமையும் சுயநலமும் இல்லாதவை. எனவேதான் அவை இரண்டும் ஒரேநேரத்தில் ஒரே விதமாக யோசித்தன.

ஆண்மான் எண்ணியது இங்கிருக்கும் நீரோ மிகச் சொற்பம், நீகுடி இதை. எனக்கு வேறு குளத்தில் பார்ப்போம் என்றால் எனது மனைவி கேட்கமாட்டாள், நீங்கள் குடியுங்கள், இப்போது எனக்கு விடாய் அடங்கிவிட்டது, பின்னர் வேறுகுளம் அகப்பட்டால் பார்ப்போம் என்று சொல்வாள் ஆகவே ஒன்றும் பறையாமல் குளக்கரைக்குப் போய், குனிந்தபடி, நீரை உறிஞ்சுவதுபோல் பாசாங்கு செய்வேன., அப்போது எனது மனைவி அங்குள்ள நீரைக் குடித்து விடுவாள் என்று ஆண்மான் எண்ணியது.

ஆனால் அந்த ஆண்மான் எண்ணியது போலவே அந்தப் பெண்மானும் எண்ணியது. எண்ணியபடி செய்யத் தீர்மானித்த இரண்டு மான்களும் நீர்க்கருகே சென்று, நீரில் வாயை வைத்தன, ஆனால் நீரை உறிஞ்சவில்லை.

தனது துணைவி நீர் அருந்துவதாக எண்ணிக்கலைமான் மகிழ்ந்தது. தனது ஆருயிர்த் துணைவன் தாகம் தீர்க்கிறானே என்று எண்ணிப் பெண்மான் மகிழ்ந்தது. நிமிடங்கள் சில கழிந்தன. ஆனால் குட்டையிலிருந்த நீர் குறைந்தபாடில்லை. இரண்டு மானுக்கும் வியப்பாக இருந்தது. அவை தலையை உயர்த்தி ஆளை ஆள் பார்த்தன. அப்போதுதான் அவைக்குப் புரிந்தது தாம் இருவரும் ஒரே விதமாகச் சிந்தித்துவிட்டன என்று. ஆனந்தக் கண்ணீர் அவைகளின் கண்ணிலிருந்து துளிர்த்தன.

இவ்வாறாக மிருகங்களே காதலைப் போற்றுகின்ற ஒருநாட்டில் வாழுகின்ற மனிதனாகிய நீ என்னை ஏங்கவைத்துவிட்டுப் பொருள் தேடப் போகிறேன் என்று சொல்வது நீதியா என்று காதலி கேட்டாள். காதலன், நெகிழ்ந்து போய்ப் பயணத்தைக் கைவிட்டான் என்பது கவிதையின் பொருள் என்று சொல்லி நிறுத்தினேன். வெள்ளையனும் அந்தப் புள்ளி மான்களைப் போல என்னை நிமிர்ந்து பார்த்தான்.

இப்படியான உன்னத உணர்வுகளைக் காட்டுகின்ற கவிதை–களை, நான் இதுவரை படிக்கவில்லை கேட்டதுமில்லை என்று அந்த வெள்ளையர் சொன்னார்.

இப்போது நீங்கள் சொல்லுங்கள் தமிழரின் கலையும் கலாச்சாரமும் உலகரங்கில் ஏறாததற்குக் காரணம் நமது கையாலாகாத்தனமா தமிழ் மொழியின் தரக்குறைவா?

நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பயனில்லை. வாருங்கள் எமது கலையையும் கலாச்சாரத்தையும் உலகுக்கு எடுத்துரைப்போம்.



**அன்பு வாசகர்களே தமிழ்க் கலாசாரத்தை எடுத்துக் காட்டக் கூடிய இலக்கியக் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம்**
**—ஆசிரியர்—**

# கவிதை உலகம்

(சைவ முன்னேற்றச் சங்கத்தினால் வோல்தம்ஸ்ரோவில் நிகழ்த்தப்பெற்ற பொங்கல் விழாவின்போது திரு சிறீக் கந்தராசா தலைமையில் நடைபெற்ற கவியரங்கின்போது படிக்கப் பெற்ற கவிதை இது.

கவியரங்கத் தலைப்பு:

**நினைக்க மனம் அழுவதென்ன**

படித்தவர்: **கரவையூர்க் கவிராயர்**

தூங்கும் தமிழுக்குத் துயரக் கதைசொல்லி
ஏங்கும் மனிதனுக்கு எழிலாகக் கதைசொல்லும்
பாங்குடன் பவ்வியமாய் பாபுனையும் எங்களுக்கு(த்)
தொங்குபாலமாய்(த்) தொங்கிக் கொண்டிருக்கும் நண்பர்

சிங்கச் சிறீயவரை நினைக்க மனம் அழுவதென்ன?
நிற்கப் பாதங்கள் பணிந்து மறுப்பதென்ன?
என்றாலும் வணக்கங்கள்
எழிதாகச் சொன்னேன் ஏற்றிடுக?
தமிழை எடுத்துச் சொல்லடுக்கிக் கவிதைஇதுவென்று
புவியில் கவியரசாய் தாளமிடும் பலபேரின் மத்தியில்
அவியாத அழகான மரக்கறிகள் ஜொலிப்பதுபோல்
புவிமனிதர் புன்னகைக்க மறந்த கோலங்களைத்
தூவிடும் மலர்களாய்(த்) துயரக் கோலங்களாய்
உணர்வு உந்தல்களாய் உலகக் கோஷங்களாய்
கவிகொண்டு இங்குவந்த கவிஞர்க்கும் என்வணக்கம்.
பொங்கல் திருநாளில் பலப்பல குழப்பங்கள்
மெய்கண்டார் எழுதிவைத்த கலண்டரிலேஒருபொங்கல்!
இரகுநாதர் எழுதிவைத்த கலண்டரிலே மறுபொங்கல்!
போதாமல் இந்நாட்டில் சிலபேரின் உளைச்சலிலால்
சேதாரக்கணக்குகளைக்கூட்டிப் பார்த்துக் குவலயத்தில்
லண்டன் நேரத்துக் கணிப்பென்று ஒருகலண்டர்!
இக்கலண்டர் தருகின்ற பொங்கல் இன்னொருபொங்கல்!
எப்பொங்கல் நற்பொங்கல் எதுவுமே புரியாது
குப்பென்று முகம் வேர்க்கக் குழம்பிப்போய்(த்)
தப்பென்று தரையினிலே தொப்பென்று இருக்கும்

உங்களை நினைக்க மனம் அழுவதென்ன?
என்றாலும் வரிந்துகட்டி எங்கள் பொங்கலுக்கு
முண்டியடித்து முன்னுக்கிருக்க வந்த உங்களுக்கு
வாய்நிறைந்த வணக்கங்கள் வடிவாகச் சொன்னேன்.
இப்போது நான்சொல்லும் சிலவிடயம் சில
குப்பென்று உங்களுக்கு வியர்வைதரும்
தப்பாக இவை எடுத்துக் குழம்பாமல்
இப்பயலை மன்னிப்பீர்!
அன்றொருநாள் மாலைவேளை சரியான குளிர்வேளை
நின்றொரு மனிதனுடன் நிம்மதியாய்க் கதைத்தேன்.
அன்றுநாம் நம்நாட்டில் வாழ்ந்த நினைவுகளை
பனைஒலைச் சரசரப்பில் சிறுகுருவிச் சத்தங்களில்
நினைவிழந்த காலங்களை அசைபோட்டோம் அழகாக!
இனிஅங்கு நாம்செல்லும் நிலைவருமோ எனக்கேட்டு
நுனிக்காலால் வீதிமண்ணில் கீறுகின்ற விரல்தன்னின்
தனித்தன்மை புரிந்துசிலவேளை மௌனமாகி
நிற்கின்ற நிலைகண்டு நிலைதளர்ந்து நாம்
நினைக்க மனம் அழுவதென்ன?
நித்திரையும் வரமறுப்பதென்ன?
தப்புத்தாளங்கள் பலகண்டு மனங்குழப்பி-மனம்
எக்கி வெகுண்டு வினாத்தொடுத்து விடைஇன்றி
வெம்பிஅழுது வேதனையால் துடிதுடித்து இந்நாட்டில்
துன்பமுறும் எனைப்போலப் பலபேரைச் சத்தியமாய்
நினைக்க மனம் அழுவதென்ன?
நிம்மதியும் போவதென்ன?
நம்நாட்டில் சிறுவர்கள் நலமின்றி வாழ்கின்றார்
உம்பணத்தில் சிலவற்றை அவர்க்காகத் தரச்சொல்லி
எம்நண்பர் சிலபேர் சிலபேரை அணுகும்போது
கைவிரித்துக் கதைசொன்ன பலபேரின் வாழ்முறையை
சத்தியமாய் நான் பார்த்து விரக்தியுற்று
இந்நாட்டில் நாம்கூடச் சையனைட்டைக் கழுத்தினிலே
கட்டிவிடில் கந்தனென்ன முருகனென்ன எட்டிநிற்கும்
சிவனென்ன யாருமே காத்திடுதல் சாத்தியமோ?
ஓ! நினைக்க மனம் அழுவதென்ன?
நிம்மதியும் போவதென்ன?
எத்தனை துன்பம் எங்கள் மனிதருக்கு?
ஏனிந்தத் துயரம் இறைவா சொல்லு
மானிடராகப் பிறந்தது தவறா?
மனிதம் நிறைந்த மானிடரானது தவறா?
சேவைசெய்யப்புறப்பட்டால் சேத்தினைப்பூச ஒருகூட்டம்
தேவை கருதித் தேவனையணுகும் பக்தர்கூட்டம் ஒருபக்கம்
ஆணவம் கொண்டு அலைகிறகூட்டம் ஆயிரம் உண்டிங்கு-அட
தேடினும் கிடைக்காத் தேவனையணுக தெருத் தெருவாகக் கூட்டம்
ஓ! நினைக்க மனம் அழுவதென்ன
நிம்மதியும் போவதென்ன?
கோயிலின் வாசலில் இரப்போர் கூட்டம்!

வாயினில் நின்று கடுங்குளிர் தன்னில்
தாயின் உறவைக் காப்பதற்காக தம்பியர்கூட்டம்
தட்டுகள் ஏந்தி கோயிலின் வாசலில் தளர்ந்து
நிற்கும் காட்சியைப் பார்த்தேன் கலங்கிப்போனேன்!
தம்பியர் கையைத் தட்டியகூட்டம் கோவிலின் உள்ளே
முருகாவாம்!


ஆயிரத்தெட்டு நாம அரச்சனையாம்!
சிவனைச் சுத்திச் சுத்தி நூறுகும்பிடு!
சனிபகவானின் பார்வையை அகற்ற பலபடி
எள்ளுகள் பவுணுகள் கொடுத்து எரிக்கின்றார்.
நெற்றியில் பட்டைத் திருநீறு
பெரிய வட்டப் பொட்டுகளாம்!
என்ன கண்டார்? எதனைக்கண்டார்?
அழும்பிள்ளை உணர்வுகளைப் புரியாத உன்மத்தர்
வெறும் வேடம் பூண்டிங்கு வேதங்கள் படிக்கின்றார்?
இவையெல்லாம்,
நினைக்க மனம் அழுவதென்ன?
உள்ளம் புழுங்கி மனம் துடிப்பதென்ன?
சம்பந்தர் பாடியது மக்களுக்கே-தனி
இறைவனுக்கு மட்டுமல்ல என்பதறிவீர்
அப்பரும் உடன் எங்கள் சுந்தரரும் கூட
வரும் மாணிக்கவாசகரும் பாடியவை
எல்லாமே மக்களுக்கே!
உழவாரப் பணிபுரிந்த அப்பர்
எலும்பைப் பெண்ணாக்கிய சம்பந்தர்
பரிவாங்கும் பணத்தினிலே
கரிகரனுக்குக் காணிக்கை செய்தவரும்
மாணிக்கவாசகர் அன்றோ?
கதவைத் திறக்க அப்பரும் பாடினார்
கதவு மூட சம்பந்தரும் பாடினார்
யாருக்கு இவையெல்லாம் பாடினரோ?
ஊருக்குள் வாழுகின்ற உத்தமர்கள்
வாழ்க்கைக்குத் தானே புரிவீர்!

இவை புரியா மானிடனின் நிலைகண்டு
நினைக்க மனம் அழுகுதன்றோ?
புரியாத மனிதர்கள் மனனம் பண்ணி
அரிபதத்தைப் பிடிப்பதற்கு வழிதேடுகின்றார்
நரியாகக் கத்தினாலும் நந்தகோபாலன் வரமாட்டான்
நலிந்தவர்கள் மனக்குறையைத் தீர்க்காவிட்டால்
புரிந்தால் வாருங்கள் புதுமைகள் புரிவோம்
விரிந்தமன மானிடரை அரவணைப்போம்
ஹரி வருவார் கூடச் சிவன்வருவார் அவரோடு
முருகனும்தான் கூடநல்ல பிள்ளையாரும்
பரிவாரமாக பாரியார் புடைசூழ வருவார்கள்-இது
தெரியாத மனிதர்கள் தெருவோரம் நிற்கட்டும்
இனி அழுவதென்ன! நிமிர்ந்திடுவோம்!
புதுமைகளைப் புரிய நாம் புதுநடைபுரிவோம்
வாய்ப்புக்கள் தந்தவர்க்கும் இனிமையுடன்
பொறுமையுடன் கேட்டிருந்த அனைவருக்கும்
அழகான வணக்கங்கள் பலகூறி
விடைபெறுவேன்! வணக்கம் பல சொன்னேன்.

# பேராசைப்படலாமா?

பெற்றதெல்லாம் நமக்கென்று
பேராசைப்படலாமா?
சுற்றமெல்லாம் இலங்கையிலே
அற்றழிந்து கலங்கையிலே
சொற்பப்பொருள் அவர்க்குதவிச்
சுகமளிக்க முயலாமல்
பெற்றதெல்லாம் நமக்கென்று
பேராசைப்படலாமா?
கற்றதல்ல தமிழினமே
கண்திறக்க மறுப்பதென்ன
பெற்றதாய்க்கும் தாயான
பிறந்தநிலம் மறப்பதென்னோ?
பற்றில்லாத தமிழரென்ற
பட்டமெமக் கேன்தானோ?

-சி. நற்கீரன் -



# கலசம் சஞ்சிகையூடு கருத்துப் பரிமாறல்

**ஆசிரியர் அவர்கள்,**

**கலசம்**

வணக்கம், நலம் நலமறிய விழைகிறேன்.

கலசம் இதழின் 25 ஆண்டு சிறப் பிதழ் சிறப்பாக பொலிவுடன் மிளிர்ந்துள்ளது. மகிழ்ச்சி. பாராட் டுகள்.

தங்களூர் தமிழா? என்ற தலைப்போடு திருவாட்டி தமிழரசி சிவபாதசுந்தரம் தக்க சான்று காட்டி உரையாடல் வடிவில் நகைச்சுவை இழையோட (முன் போல் பயணம் செய்யமுடிய வில்லை. எங்கும் ஒரே தடங்கல், பரவெளியின் தூய்மைக்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது –நாரதர்) எழுதியு ள்ளது பொன்குடத்துக்குப் பொட் டிட்டது போல கலசம் இதழுக்கு மேலும் அழகு சேர்த்துள்ளது.

தீபாபலியா? தீபாவளியா? தீவாளியா? என்ற தலைப்பின்கீழ் புலோலிப் புலவர் செல்லத்தம்பி, சொற்கள் திரிந்து வழங்குதலையும், இலக் கண மரபுகளையும் விளக்கிச் சிறப்பாக எழுதியுள்ளார்.

கொழும்பு திரு செல்வமாணிக்கன் வெங்காயம் சுக்கானால் வெந்த யத்தில் என்ன பயன்? என்ற பாடலின் பொருளை விளக்கி எழுதியுள்ளது பாராட்டுக்குரியதாய் அமைந்துள்ளது. மதம் மனி தனுக்கு அபின் என்ற தலைப்பின் கீழ்த் திருவாட்டி ஆர். வி. இலட்சுமி நயமுற எழுதியுள்ளார். மதமான பேய் பிடியாதிருக் கவேண்டும் எனத் தாயுமானவர் பாடினார் (பக்கம் 81) என்று குறிப்பிட்டுள்ளார். மதமென்ற பேய் பிடியாதிருக்கவேண்டும் என்று பாடியது வள்ளலார் இராமலிங்க அடிகளார் என்பர். மதம், மது எனும் இரண்டு சொற்களும் ஒரே வேரின் அடியாகப் பிறந்தவை எனக் கூறுவர் மொழி நூலறிஞர்.

திரு அரங்க முருகையன் அந்த ணர் என்போர் அறவோர் என்று விளக்கி எழுதியுள்ள பகுதியில் (பக்கம் 68) தாழ்த்தப் பெற்ற குடும்பத்தில் பிறந்தும் பக்தியில் எவருக்கும் சளைக்காத நந்த னாரும் (திருநாளைப் போவார் என்றிருக்கவேண்டியது சுந்தர னாரும் என்று தவறாக அச்சா கியுள்ளது.

அதுபோல பக்கம் *111* இல் ஆறுபடை வீடுகளில் என்றிருக்க வேண்டியது ஆற்றுப்படை வீடு களில் என்று தோற்றமளிக்கிறது.

கலசம் தொடர்பான அனைவ ருக்கும் பாராட்டுக்கள்.

**தங்களன்புள்ள**

**அரங்க முருகையன்**

---

**E. K. RAJAGOPAL**
**EITOR, 'EELAKESARI'**
**38, MOFFAT ROAD**
**LONDON**
**SW17 7EZ**

லண்டனில் ஆன்மீகத்துக்கு என்று கலசம் இதழை வெளியிட்டு வரும் அதன் நிர்வாகிகள் தம் கடின உழைப்பினால் இன்று வெளி யிட்டுள்ள 25வது கலசம் *160* பக்க வண்ண மலர் பிரமிக்க வைத்து விட்டது. உண்மையான ஒரு பத்திரிகையாளனால்தான் இது ஒரு சாதனை என்பதை உணரமுடியும். உங்கள் முயற்சிக்கு நான் தருவது ஒரு துளி.

**அன்புடன்**

**ராஜகோபால்.**

---

62 Eversleigh Road
East Ham
London E6 1HQ
27th February 1999

The Editor
"Kalasam"
42 Stoneleigh Road
Clayhall
Ilford
Essex IG5 0JD

I am writing this letter,in response to an article by an author whose name I understand was inadvertantly omited titled "Plight of Saiva temples in Sri Lanka", in your 25th issue of "Kalasam" magazine. I was also saddened to note the plight of Saivaism and the state of the temple priests.

I was surprised at the writer's perception of Sri Sathya Sai Baba Organistion. The writer labels Sathya Sai Baba organisation as a heretic faith and a cult. If, such labelling was supported by serious examination, and study, it would merit inclusion in your esteemed magazine. A group termed "Hawaism Saivaism" mentioned in the article in issue, I presume, refers to a group whose revered leader is Satguru Sivaya Subramaniyaswami whom I hadd the good fortune to meet, in East London at a function arranged by your Sangam.

I believe this Swami is doing laudable service to the cause of

Saivaism the same cause for which your magazine stands. His group too has been branded as a heretic faith and also as mirage of varying dimension, by the article in issue.

I feel it opportune, to state that the Sathya Sai Organisation is a heretic faith, a cult or a heretic organisation.

The word "heretic" in the Oxford Dictionary means "one advocating an opinion contrary to an accepted doctrine". The Sathya Sai Organisation is neither a Faith nor a religion, but a Spiritual and service Organisation. It, in no way acts contrary to any doctrine of any faith, but inspires a Hindu to be a good Hindu, a Christian to be a good Christian and so forth.

May God's grace be upon you for your continued good work.

Yours Faithfully
B. Balaraman

## கலசம் தடுமாறவில்லை! கட்டுரையாளர்கள்தான் தடுமாறுகின்றனர்

கலசம் இதழ் மணி 6 ஒலி 25ல் கலசம் தடுமாறுகிறதா? என்ற கட்டுரை பார்த்தோம். புரியாத மொழியில் நடைபெறும் பூஜை முறைகள் புரியும் தாய் மொழியில் நடைபெறவேண்டும் எனவும் கலசம் ஆசிரிய தலையங்கம் தடுமாறுகின்றதெனவும் திரு. அரங்க முருகையன் குறிப்பிட்டிருந்தார் அவருடைய அறியாமையையும், தடுமாற்றத்தையும், போக்க இங்கே சில விடயங்கள் குறிப்பிட்டுள்ளாக வேண்டியுள்ளது. இவ்விடயம் திரு அரங்க முருகையன் போல் எண்ணக் கருத்துள்ள அனைவருக்கும் உரியதாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் தெரியப் படுத்திக் கொள்கின்றேன்.

எத்தனையோ சமயவாதிகள், மகான்கள் வாழ்ந்து காட்டின, வழிகாட்டி விட்ட எமது சைவசமயத்தில் அவர்கள் யாருமே செய்யாத புதியதொரு புரட்சியை நாங்கள் செய்வோம் என நினைத்து தமிழில் அர்ச்சனை என குரல் கொடுக்கும் அதிமேதாவிகளின் தமிழ் பற்றை நினைக்கும் போது உள்ளம் பூரிக்கின்றது. இந்தியாவில் அரசியல் லாபம் கருதி எங்கும் தமிழ் எல்லாம் தமிழ் என்று கூறிக கொண்டு ஆலயத்திலும் தமிழ் கருவறை அர்ச்சனையில் ஒலிக்க வேண்டும் என முழங்கி அதற்கு முயற்சி எடுத்து தோல்விகண்டு நிற்கும் அரசியல்வாதிகள் சமயக் கிரியைகளில் முதன்மை பெறும் மங்களமான மஞ்சள் நிறத்தை தமது தோளில் சால்வையாக போர்த்திக்கொண்டு நாத்திகம் பேசும் சூழல் நாக்குடையோர் அவர்களுடைய குணஇயல்பு எம்மவர்களையும் பற்றிவிட்டது வேடிக்கையானது. இனி விடயத்துக்கு வருவோம்.

இறைவன் அம்மையப்பன் எல்லா மொழிகளும் தெரிந்தவன் நாம் எப்படி அழைத்தாலும் செவி மடுப்பார். இறைவனை எந்த மொழியிலும் பூசிப்பவர் விருப்பத் திற்கிணங்க போற்றி வழிபடலாம். அதுவும் அவரவர் தாய் மொழியாயின் மனம், மொழி, மெய்யால் ஒன்றி வழிபடலாம் என்பது கட்டுரையாளரின் கூற்று. ஆலயங்களில் தமிழ் மொழிக்கே இடமில்லை என்பதுபோல் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனைத் தாமே உணர்ந்து மனம் மொழி, மெய்யால் அனைவரும் வழிபடவே திராவிட தோத்திரம் எனப்படும் பஞ்சபுராணங்கள், போற்றி அர்ச்சனைகள், என சமயகுரவர் வழங்கினார்கள் மந்திரம் என்பது இறைவனின் அருளை மெருகுற செய்வது. ஆலயம் அமைக்கும்போது தூல லிங்கமாகிய கலசம், பொன், வெள்ளி, செம்பு போன்ற லோகத்தாலும் விக்கிரஹம், கருங்கல், பஞ்சலோகம் போன்றவற்றினாலும் அமைக்கப் பெற்று அதன்கீழே செம்புத்தகடு அந்தந்த மூர்த்திகளின் யந்திர மூல மந்திரங்களோடு பிஷார சக்தியுடைய சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டு அமைக்கப்படுகின்றது. தமிழ் எழுத்து ஒரு ச என்றால் சமஸ்கிருதம் நான்கு எழுத்து உடையதாய் நான்கும் உச்சரிப்பு வித்தியாசமாய் அமைகின்றது. இந்த உச்சரிப்பின் அதிர்வுகள் யந்திர, விம்ப, தூபி ஸ்தானங்களில் சிறு ஊசித்துண்டை காந்தம் இழுப் பது போல் படர்ந்து இறைவனின் அருளை மெருகுறச் செய்கின்றது. இது காலங்காலமாக எம்மவர் கண்டு அனுபவித்த மெய்யும் ஆகம புராணங்களின் துணிபு மாகும்.

இதையே மந்திகேனம், கிரியா கேனம், பக்தகேனம் எனக் கூறப்படுகின்றது. சர்வசாதகர் மந்திரத்தால் மனமுருகி அழைக்க, குருக்கள் கிரியா நெறிபாவனையால் அழைக்க, பக்தர்கள் தம் மெய் மறந்து வழிபட்டு உருகி அழைக்க ஆலயம் என்கின்ற கூடம் ஆன்மாக்களின் ஒன்று கூடலால் தெய்வ சானித்தியம் நிறைந்து அருள் தருகின்றது. இப்படியான புனித நிகழ்வில்

தமிழ்புரட்சி செய்வோர்க்கு கலசம் கூறிய ஆணித்தரமான கூற்று தமிழில் பற்று இருக்க வேண்டும் வெறி இருக்க கூடாது என்ற தக்க பதிலாகும். இது தடுமாற்றமல்ல. இறைவன் எம்மை இயக்கும் ஒவ்வொரு விடயத்திலும் மேலோங்கி இருப்பவன். அந்த இறைவனுக்கு உபசாரம் செய்யும் மொழியும் புனிதமானதாக சக்தி நிறைந்ததாக இருக்கவே அம்மொழி கற்போர் ஆசாரசீலராய் மெய் நிறைந்தோராய் விளங்குகின்றனர்.

உதாரணமாக மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழி பேசுவோரும் நாம் வணங்கும் சிவன், விஷ்ணு, சக்தி தெய்வங்களையே வழிபடுகின்றனர். அங்குள்ள பூஜைகளும் சமஸ்கிருத மொழியிலேயே நடைபெறுகின்றது. அவர்கள் ஏன் இப்படியான புரட்சி செய்ய விரும்பவில்லை? இன்னும் எந்த நாடு சென்றாலும் தம்முடைய தாய்மொழியை பயமின்றி சத்தம்போட்டு பேச கூடியவர்கள். (எம்மவர்கள் தமிழ்மொழி பேசுவதையே அநாகரிகமாக நினைப்பவர்கள்) அவர்கள் யாரும் சமஸ்கிருதமொழியை புரியாத மொழியாக கருதவில்லையே. இதை பார்த்தே கலசம் ஆசிரியர் தலையங்கம் பூசை செய்யும் மொழி விவாதத்துக்குள்ளாக்கப்படுகின்றது என்ற உண்மை நிலையை வெளிப்படுத்தியதேயன்றி தடுமாற்றம் அல்ல. திரு சிவசம்பு ஸ்ரீகந்தன் கூற்றும் நோக்கப் படவேண்டியது. பேச்சு வழக்கில் உள்ள மொழிக்குள் பாவம் புகுந்துள்ளது மெய்யானதே. தமது இகபர சுகங்களுக்காக எத்துணை பாவங்கள் புரியும் பாவிகள் வாயிலிருந்து பேசப்படுகின்றது. மொழி பாவம் செய்யாவிடினும் பாவம் செய்யும் பலரால் பேசப்படுகின்றது என்பது மெய்யே. அதே மொழியால் கருவறையிலே மேலோங்கி தூய்மை ஆசாரமாய் நிறைந்து விளங்கும் இறைவனிடத்தில் அந்த இறையை போற்றும் மொழியாக உபயோகிக்கும் போது இறைவனை எம்மோடு சமநிலைப் படுத்துவதாகிவிடும். உதாரணமாக திரு அரங்க முருகையன் சாதாரண மனிதன் மனிதனுக்குரிய சகல பலவீனங்களும் அவருக்கு இருக்கும் அவரைப்பார்த்து அரங்க முருகையனே வணக்கம் என்கின்றோம் தமிழ் அர்ச்சனை எனும் போது அதையே ஆலயத் திலும் கணபதியே வணக்கம் என்போம். காலங்காலமாக சக்தி நிறைந்த ஸுமுகாய நமக என்ற சொல்லும் கணபதியே வணக்கம் என்ற சொல்லுக்கும் எவ்வளவு சக்தி வித்தியாசம் உண்டு என்பதை உணரவேண்டும்.

கோயில் வழிபாடு பற்றியெல்லாம் இளம் தலைமுறைக்கு எடுத்து இயம்பவேண்டியவர்கள் நாமே. எமக்கு எடுத்து இயம்பியவர்கள் எம் மூதாதையர். தமக்கு பிடிக்காத விடயங்களை இளம் தலைமுறையினரை சாடி மாற்றங்கள் செய்வோம் என நினைப்பது அறிவின்மையாகும். 1969ம் ஆண்டு நீல் ஆம்ஸ்ட்ராங் என்ற விஞ்ஞானி சந்திரனில் கால்பதித்து புனிதத் தன்மை குலைந்துவிட்டது எனவும் அதற்கு ஓர் உருவச்சிலை வைத்து நாம் ஏன் வழிபட வேண்டும் எனவும் அற்புதமான கேள்விகள் வருங்கால தலைமுறையினரைச் சாடி அரங்க முருகையன் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். சிறுபிள்ளைத்தனமான கட்டுரையாளரின் கேள்விகள் மிகவும் வேடிக்கை தருகின்றன. ஆக 1969ல் இருந்து நவகிர ஹங்களிலே ஒன்றான சந்திரன் கோவிலில் இருக்கும் உருவச் சிலை மூலம் யாருக்கும் அருள்தர வில்லையா? அன்றிலிருந்து வெறும் சிலையாகவே உலகங் களில் உள்ள ஆலயங்களில் சந்திரன் இருக்கின்றாரா? மனிதனுடைய அறிவுத் தன்மையை சோதிக்க இறைவன் சற்று இறங்கி வருவதுண்டு. அதை பார்த்து மனிதன் தானே உலகை இயங்க வைப்பேன் என் நினைப்பதால் அழிவை சந்திப்பதுண்டு. இது காலங்காலமாய் எமது புராண இதிகாசம் கண்ட மெய். கட்டுரையாளர் புரிய அவர் பாணியில் புரியவைக்க (கண்ணதாசன் பாடல்-வந்தநாள் முதல் இந்த நாள்வரை) என்ற பாடல் மெய்ஞானத்தை வைத்து விஞ்ஞானம் கண்டோர் பற்றி அழகாய் கூறப்பட்டிருக்கு.

பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் கோவில் ஆரம்பித்து பின் அறங்காவலர் சண்டையிட்டு அடுத்த கோவில் அரம்பமாவது வாடிக்கையான விடயமாகிவிட்டது. அத்தோடு ஆகம சாஸ்த்திர விதி மறந்து தம் இஷ்டங்களுக்கு கோவில் அமைப்பதால் எமது கலாச்சார சரித்திரங்கள் வரும் சந்ததி மறந்திடுமே என்ற அச்சம் காரணமாய் ஐரோப்பிய நாடுகளை பொறுத்தமட்டில் கோமில் உள்ள ஊரிற் குடியிருப்பு ஆபத்து என குறிப்பிடப்பட்டது. எம்மவர்கள் புரிய வேண்டும் என்பதற்காகவே தவிர தடுமாற்ற கூற்று அல்ல.

**யேநாஸ்ய பிதரோயதா யேந யாதா பிதாமஹா!**
**தேந மார்கேண கந்தவ்யம் மார்கஸ்தோ நவாஸீததி!**

என்ற இந்த சுலோகத்தின் பொருள் ஒவ்வொருவனும் தன்னுடைய தந்தை எந்த வழியை பின்

பற்றினாரோ, தன்னுடைய பாட்டனார் எவ்வழியை பின்பற்றி னாரோ அந்த வழியில் செல்பவனுக்கு சிரமம் இருக்காது. பலபேர் சென்ற பாதை ஒற்றையடிப் பாதையானாலும் அதுகல் முள்போன்ற துன்பங்கள் தருகின்ற தடைகள் அகற்றப்பட்டு நன்கு தேய்ந்து அதில் செல்பவர்களுக்கு சுகமாக இருக்கும். நடப்பதற்கு சிரமாக வும் இராது என்பதாகும். இதையே வள்ளுவரும் கூறினார்.

**பழமை எனப்படுவது யாதெனில் யாதும் கிழமையை கீழ்த்திடா நட்பு**

என்பதாகும் எனவே எல்லா மதங்களாலும் போற்றப்படும் ஆதியும் அந்தமும் இல்லா எம்மதத்தை புரட்சி செய்ய நினைத்து களங்கப்படுத்தாது காப்பது எம் அனைவரின் கடமை யாகும்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**

**துன்னையூர்**

**ராம். தேவலோகேஸ்வரகுருக்கள்**

# ஓர் அபிப்பிராயம்!

சங்ககால நூல்கள் யாவும் அங்கமங்கமாகப் பரிசீலிக்கப்பட்டவை. அறிவிலும் ஞானத்திலும் மேம்பட்ட சங்கப் புலவர்களால் அனுமதிக்கப்பட்டவை. அவமில்லைப், பிழைகளில்லை, அர்த்தமற்ற பொருளில்லை என்று தெளிந்து, தேர்ந்து எடுக்கப்பட்டவை.

பொற்றாமரைக் கேணியின் புனிதக் கலசத்திலே வைத்து அரங்கேற்றப் பட்டவை. விழுமியமான வித்துவப் புலமையும், தத்துவப் புலமையும், கவித்துவப் புலமையும் வாய்ந்த சங்கப் புலவர்களால் தரணிக்கு வழங்கப்பட்டவை.

எழுத்திலும் தவறு இல்லை, பதத்திலும் பழுது இல்லை, பொருளிலும் பிழைகள் இல்லை என்று கணித்து நன்று நிர்ணயித்த பின்னரே சங்ககால நூல்கள் மக்களுக்குப் பயிலக் கொடுக்கப் பட்டவை.

**எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்**
**பாடியவன் பாட்டைக் கெடுத்தான்**

என்னும் (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி–1998) காலாண்டுக் கலசத்திற் கண்டவொரு விடயமே இந்த இரண்டுவரித் தலைப்பு விடயம். அந்த விடயத்தை இட்டே இந்த அபிப்பிராயம்.

**தினற்பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும்**
**விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல்.**

என்ற குறளுக்கு இன்று வேறு வியாக்கியானம் கண்டபொழுது கொண்ட அபிப்பிராயம்

**தினற்பொருட்டாற் கொல்லாது எனின்** என்று இருப்பது பிழை **தினற்பொருட்டாற் கொள்ளாது எனின்** என்று இருப்பதே சரி என்பது ஆய்வாளரின் விளக்கம்.

எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் – பாடியவன் பாட்டைக் கெடுத்தான்

என்பதற்கிணங்கக் குறளிற் தவறு ஏற்பட்டுள்ளது என்கிறார் ஆய்வாளர். கொல்லாது என்றும் சொல்லில் எழுத்துப்பிழை ஏற்பட்டிருக்கும் என்கிறார் ஆய்வாளர். எந்தக் காலகட்டத்தில் இந்த எழுத்துப்பிழை ஏற்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளரால் திட்டவட்டமாக வரையறுத்திக் கூறப் படவில்லை. ஆயினும் நாம் ஆதியிலிருந்தே எமது அபிப்பிராயத்தை ஆரம்பிப்போம். தமிழ் இனத்துக்கும் தரணியிற் குறளைப் பயிலும் ஏனைய இனங்களுக்கும் எடுத்துரைப்போம். எல்லோரின் கருத்தையும் கலசத்தில் ஈர்த்தெடுப்போம். எதிர் பார்த்தெடுப்போம். வள்ளுவன் எழுதத் தெரிந்தவனா? எழுத்தாணிகொண்டு எழுதும் ஆற்றல் உடையவனா? என்பது மேற்கண்ட ஆராய்ச்சிக்கட்டுரையில் விளக்கப்படவில்லை. ஆனால் புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்தை எழுத்தாணியால் ஓலையிற் பிரதிபண்ணிய எழுத்தாணிக் காரன்தான் எழுத்துப்பிழை விட்டிருப்பான் என்கிறது ஆய்வுக் கூற்று. முதலிற் கால விபரம் நிரூபணமாக வேண்டும். ஆகவே தான் கலசம் வாசகரும், கலசம் வாசகர் படித்துச் சொல்லக் கேட்பவரும் காரணத்தைப் புரிந்து கொள்ளமுடியும். காலத்தையும் உணர்ந்துகொள்ள முடியும்

நாம் இப்பொழுது வள்ளுவனுக்கு எழுத்தாணி கொண்டு எழுதும் வல்லமை இல்லையென்றே வைத்துக் கொள்ளுவோம். எழுத்தாணிக் காரன்தான் குறிப்பிட்ட திருக்குறள் அதிகாரத்தை வள்ளுவன் சொல்லும் பொழுது எழுதினான் என்றும் வைத்துக் கொள்ளுவோம். எழுத்தாணிக்காரன்தான் வள்ளுவன் குறளின் கழுத்தை அறுத்தான் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்படி எழுத்தாணிக்காரன் எழுத்துப்பிழை விட்டிருந்தால், சங்கப் புலவர்களில் எந்தப் புலவன் விட்டுவிட்டாலும் அந்தப் புலவன் நக்கீரன் விட்டிருப்பானா இந்தப் பெரிய பிழையை. கோழிக் குஞ்சைப் பருந்து தாவியது போலவும் சுண்டெலியைப் பூனை கௌவியது போலவும் தவளையைப் பாம்பு தாவிப் பிடிப்பது போலவும் சுட்டிக்காட்டிச் சூரத்தனம் பண்ணியிருக்கமாட்டானா? இந்தக் குறளை வெட்டித்தள்ளி விலக் கியிருக்கமாட்டானா? வள்ளுவன் திருக்குறள் நூலை வையகம் அறியாதவண்ணமே செய்திருக்க மாட்டானா? நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்

குற்றம் குற்றமே என்று இறைவன் சிவனுக்கே எச்சரிக்கை செய்த இறுமாப்புக் கொண்டவன் அல்லவா அந்த நக்கீரன். அப்படி நக்கீரனின் அருந்தொலை நோக்கிக் கண்களுக்கும் நுண்ணிய கணனி மூளைக்கும் அகப்படாமல் அந்தக் குறள் தப்பித்தவறி மீண்டிருந்தாலும் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் இவைகள் அனைத்தும் மடச் சங்கங்கள் தாமா? இத்தனை காலமும் இந்தக் குறளைப்படித்துப் படித்துப் பயனை நுகர்ந்து, பாருக்கும் இதன் கருத்தைப் பகிர்ந்துவந்த ஆயிரமாயிரம் செந்தமிழ் மேதைகள் அனைவரும் என்ன அயர்ந்து விட்டார்களா? அல்லது அறிவே மயங்கிவிட்டார்களா? ஏசுவுக்குப் பின்னென்று அழைக்கப்படும் இரண்டாயிரம் ஆண்டுகளும்இதோ, முடிவடையப் போகின்றதே இத்தனை காலமும் வாழைப்பழம் என்று படித்துச் சுவைத்தவர்களைப் பாலைப்பழம் என்று படிக்கத் தூண்டும் முயற்சி முடிக்கவல்ல முயற்சியா? அப்படியானால் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் வேண்டுமல்லவா பாலைப்பழப் பயிற்சியில் மக்கள் தேர்வைப் பெறுவதற்கு.

அதுமட்டுமா? இன்னுமொரு பொருள் நாட்டத்தை இங்கு கவனிப்போம்.

வள்ளுவன் புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்தில் – புலால் மறுத்தலையே ஆணித்தரமாக வலியுறுத்துகின்றான். புலாலை மறுக்கவேண்டுமானால் புலால் உண்பதை மறக்க வேண்டுமானால் மாமிசத்துக்காக மிருகங்களைக் கொல்லும் கொலைத்தொழில் நிறுத்தப்பட வேண்டும், மச்சத்துக்காக மீன்களைப் பிடித்து வதைக்கும் கொலைப்பாவம் நிறுத்தப்பட வேண்டும்.

இதுதான் வள்ளுவனுடைய மூல முதற் கருத்தாகும். விலை கொடுத்து மாமிசத்தையும், மச்சத்தையும் கொள்வனவு செய்வதை நிறுத்தினால், கொள்வனவு செய்து வந்த சமூகத்தினர் மட்டுமே புலாலை மறுத்திருப்பார்கள், மறந்திருப்பார்கள் ஆனால் மிருகக் கொலைஞரும் மீனவரும் தொடர்ந்து புலாலை உண்டவண்ணமே இருப்பார்கள்தானே. அவர்களுடைய வாழ்க்கையே மாமிச உணவிலும், மச்ச உணவிலும் தானே முக்கியமாக தங்கியுள்ளது. தாம் உண்பதற்காகவும், ஏனைய மக்களும் உண்ணும் பொருட்டு அவர்களுக்கு விற்பனை செய்வதற்காகவும்தானே மிருகங்களையும் கொல்லுகின்றனர், மீன்களையும் பிடித்து வதைசெய்கின்றனர். இந்த வகையில் கொலையினச் சமுதாயம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருமல்லவா. அப்படி அவர்களின் சமுதாயம் பெருகும் வாய்ப்பிருந்தால் புலால் மறுக்கும் சமுதாயத்திலிருந்தும் நாளுக்குநாள் ஒவ்வொரு பகுதியினர் புலால்மறுக்காதாரின் சமுதாயத்தை இணைந்து கொண்டே இருப்பார்கள் அல்லவா. இல்லையென்கிறீர்களா? உண்டு என்கிறேனே நான். எப்படித் தெரியுமா? வள்ளுவன் காலத்தில் என்ன விகிதாசாரப்படி புலால் மறுக்காதாரும் புலால் மறுத்தாரும் இருந்தனரோ நாம் அறியோம். ஆனால் இன்று புலால் உண்போர் ஐந்தில் நான்கு மடங்காகி விட்டனரே. கணக்குப் பிழையா? கணக்குப் பிழையோ சரியோ கணிப்புக் குறிப்பு ஓரளவு சரியல்லவா. இந்த நிலை வரக்கூடாது என்றுதான் அன்றே கனவுகண்டான் வள்ளுவன்.

நூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்களால் மானிடர் சமுதாயத்துக்கு வழி காட்டிய வள்ளுவன் இந்தப் புலால் மறுத்தல் மார்க்கத்தால் ஐந்திலொரு பங்கினரையாகுதல் தக்கவழியிற் திருப்பிவிட்டமையே வள்ளுவன் செய்த மகத்தான சாதனையல்லவா. ஏனென்றால் அன்று அவன் புலால் மறுத்தலை வலியுறுத்தாவிட்டால் இன்று சுத்த போசனம் மறுத்தல் என்றும் ஒரு புதிய அதிகாரம் தனிநூல் உருவத்தில் உதயமாகி இருக்கும். எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுமிருக்கும் அல்லவா. ஆகவேதான் கொலைப்பாவத்தை ஆணித்தரமாக அழித்துவிட நினைத்தான். இலைகளையும் கிளைகளையும் இடை மரத்தையும் வெட்டிப் பட்டைகளையும் செதுக்கித்தான் என்னே பயன்? அடி மரமும் ஆணிவேரும் அப்படியே இருந்துவிட்டால் என்று கருதினான். அதனாற்தான் கொலைப் பாவத்தை இல்லாமல் ஒழிக்கவே புலால் மறுத்தல் என்னும் இந்த அதிகாரத்தை 133 அணியில் இருப்பத்தாறாவது அணியாக நிறுத்தினான். மனித சமுதாயத்தின் இன்றியமையாத வழிகள் இன்னும் 107 இருந்தும் அவைகளுக்கு முன்னதாகவே புலால் மறுத்தலைப் புகுத்தினான். கொலையும் வதையும் ஒழிய வேண்டும். தினற்பொருட்டால் உயிரைக் கொல்லும் கொலைப் பாவம் ஒழியவேண்டும். ஆணி வேர் அறுந்துவிடவேண்டும். இதுவே வள்ளுவனின் திடமான வலியுறுத்தல். எனவேதான்

**தினற்பொருட்டாற் கொல்லாது**
**உலகெனின் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவார்**
**இல்**

என்றான். தாம் உண்ணும் பொருட்டும் – ஏனையோர் உண்ணும் பொருட்டும் மானிடர் மிருகங்களைக் கொல்லாவிட்டால் – மீன்களைப் பிடித்து வதை செய்யாவிட்டால் உலகத்தில் விலைக்காக எவரும் மாமிசமும் மச்சமும் விற்பனை செய்யவும் மாட்டார்கள். இங்கே தாம் உண்ணும் பொருட்டு என்னும் பொருள் தத்துவப் பொருளாக மறைந்து இருந்து மேன்மையுடன் பிரதிபலிக்கின்றது. புரிந்துகொள்ள வேண்டியது பயின்றுகொள்ளும் வாசகர்கள்தான். இந்தப் பக்குவம்தான் திருக்குறளின் திவ்வியமான பொருளடக்கம். கடுகு தன்னுள்ளே ஏழுகடலைப் புகுத்தியது போலல்லவா குறளும் தன்னகத்தே பிணக்கில்லாமல் எத்த னையோ கருத்துக்களை அடக்கி யுள்ளது. இன்னும் சில உதாரணங்களை ஆய்ந்தறிவோமாக புலால் மறுத்தல் என்றுமிந்த அதிகாரத்தில் வள்ளுவன் கொல்லா மையைத்தான் எல்லா வகையிலும் வலியுறுத்துகின்றான். ஒவ்வொரு குறளிலும் பின்னணியாக நிற்கி ன்றது கொல்லாமை. இவ் அதிகாரத்திலுள்ள பத்துக் குறள் களில் ஆறு குறள்களிற் கொல் லாமை என்னும் நல்ல பக்குவத்தைத்தான் அழுத்தமாக அறிவுறுத்துகின்றான்.

* (251) முதற் குறளில் பிறிது ஊன் உண்பான்.. என்கிறான். ஒரு உயிர் ஆரோ ஒருத்தரால் வதைசெ-சய் யப்படாமல், கொலை செய்யப் படாமல், எப்படி அவன் இன்னொரு உயிரின் ஊனை உண்ணமுடியும். எனவே ஊனை உண்ணாதிருக்க வேண்டுமாயின் முதலிற் கொலைப் பாவம் நின்று விடவேண்டும் என்பதையே வள்ளுவன் இங்கு வலியுறுத்துகின்றான்.

(254) **அருளல்லது யாதெனில் கொல்லாமை..** என்று இன்னொரு குறளில் வலியுறுத்துகின்றார். இங்கேயும் கொல்லாமைதான் சொல்லப்படுகின்றது.

(256) **தினற்பொருட்டாற் கொலாது உலகெனின்..** என்று வினவுகின்றான். இந்தக் குறளிற்தான் மிகவும் ஆணித்தரமாகக் கொலைப் பாவத்தை மறுத்துரைக்கின்றான். கொலைப்பாவத்தின் நிலைக்களத்தையே அசைத்து அழித்துவிட முயலுகின்றான்.

(257) பிறிதொன்றன் பண்ணது.. என்று ஊனை மற்றுமொரு குறளிற் சுட்டிக் காட்டுகின்றான். இன்னுமொரு உயிரின் ஊன் எனின், கொலை செய்யாமல் எப்படி வந்தது இன்னுமொரு உயிரின் ஊன் என்பதே திடமான மறைபொருள். இங்கேயும் கொல்லாமைதான் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(259) ஒன்றன் உயிர் செகுத்து ஒன்றின் உயிரைக் கொன்று என்று ஆரம்பிக்கின்றான் இந்தக் குறளை. இங்கேயும் கொல்லாமைதான் கூறப்படுகின்றது.

(260)கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி.. என்று தொடங்குகிறான் இந்தக் குறளை. இங்கேயும் கொல்லாமைதான் வல்லமையோடு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தில் அறுபது சதவீதமான பொருள் கொல்லாமையைப் பற்றியே வலியுறுத்தும் பொழுது தினற்பொருட்டாற் கொள்ளாது என்றுதான் அந்தக் குறள் அமைந்திருக்க வேண்டும் என்பதை நாம் மறந்திருக்க வேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

குறளை வந்தனைசெய்யும் எமது சிந்தனையில் ஏற்பட்ட ஓர் அபிப்பிராயம் செந்தமிழ் இனத்திடம் சிரம் தாழ்த்தி விடுக்கும் அபிப்பிராயம். வள்ளுவன் குறளைத் தெள்ளுதமிழ் மறையாக எண்ணியெண்ணி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்துவிட்டோம். அதனால் நமக்கு ஏற்பட்ட பயனோ ஆயிரமாயிரம். தேன்மணக்கும் சுகந்த நறுமலர்களால் ஆன பூமாலைக்கு மேலும் இயற்கைச் சாந்துகளைத் தெளிப்பதைத் தற்போதைக்கு நிறுத்திவிட்டு அதிமுக்கியமான அவசியமொன்றுள்ளது. எழுத்தாளர் தாம் தமது எழுத்துத் தருமத்தால் இந்த அவசியத்தை நிறைவேற்ற வேண்டும். இதுவும் ஓர் அபிப்பிராயமேதான்.

புலால் மறுத்தல் போன்ற விவாதங்களை ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் போதை மறுத்தல் என்னும் பயங்கரமான விடயத்தைப் பற்றி நமது எழுத்தாளர் கொஞ்சம் அக்கறை செலுத்துவது தக்கதொரு தருணப்பணி என்பது எமது அபிப்பிராயம். விஞ்ஞான ஆய் வாளரின் அனுசரணையுடன் இது போன்ற ஆய்வுகளை ஆரம்பிப் போமா? இதுவும் எமது ஓர் அபிப்பிராயமே. இந்தப் போதை அரக்கனைப் பற்றி ஏராளமான உணர்ச்சிப் பாடல்களை 1961ம் ஆண்டிலிருந்து இலங்கை வானொ லியிலும், பத்திரிகைகளிலும், எனது மரபுநாதம் என்னும் தனிப்பாடல் நூலிலும், ஏனைய உபநூல்களிலும் வெளியிட்டிருக்கிறேன். அதனால் ஓரளவு திருப்தி அடைகின்றேன். போதை மறுத்தலும் வள்ளுவன் குறள் அதிகாரங்களில் ஒன்றுதான். கள் உண்ணாமை என்னும் அதிகாரத்தின் பிரதித் தோற்றம்.

**இலண்டன் கிராமியக்கலை அரங்கம் சார்பில்**

**–கவிஞர் ஞானமணியம்–**

# இலண்டன் கோயில் அறக்காவலர்கள் இப்போதே செய்வார்களா?

கலசம் ஆசிரியர் அவர்கட்கு!

நாம் நமது சுற்றங்களுடன் இங்கு நடக்கும் விழாக்களுக்குச் சென்று களித்துச் சுகித்து இருக்கின்றோம். நம் தாய் நாட்டையும் அங்கு இருக்கும் நம் உற்றார், பெற்றார், குழந்தைகளையும் நினைக்கி றோமா?

**தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை**

என்று வள்ளுவர் இல்வாழ்க் கையில் ஈடுபட்டவன் தனக்குக் கண்டு தானம் வழங்க வேண்டும் என மிக அழகாகச் சொல்லி இருக்கின்றார். தன்னை முதலில் பார்த்த பின்னர், சுற்றம் (ஒக்கல்), விருந்தினர், தெய்வம், இறந்த ஆன்மாக்கள் (தென்புலத்தார்) என்ற வரிசையில் பாதுகாக்க வேண் டுமாம்.

திருவள்ளுவன் சொன்ன இந்த ஐந்து அறங்களையும் இலண்டன் வாழ் தமிழர்களாகிய நாம் செய்கின்றோம். அதிலும் தெய்வத் திற்குக் கொடுப்பதில் நம்மை மிஞ்ச யாரும் இல்லை என்ற அளவிற்குக் கோயில்களுக்குக் காசை அள்ளி அள்ளிக் கொடுக்கின்றோம். கோயில்கள் காளான் முளைப்பது போல் இலண்டன் எங்கும் நாளொரு வண்ணம் முளைத்துக் கொண்டு இருக்கின்றன. பார்க்கப் பார்க்கச் சந்தோசமாக இருக்கின்றது. ஆனால் இந்தக் கோயில்களுக்கு பொது மக்களாகிய நாம் கொடுக்கும் பணம் என்ன ஆகின்றது.

பழந்தமிழ் மக்களின் கலை, கலாச்சாரத்தை வளர்த்தது கோயில் களே. அதற்குச் சான்றாக நிற்ப வைகளும் கோயில்களே. இயற்கை யால், நோய்களால், போர்களால் வந்த பஞ்சங்களைப் போக்க கோயில்களும், சமய அறநிலையங் களுமே காலங்காலமாக உதவிபுரிந் திருக்கின்றன.

ஈழத்தில் நமது குழந்தைகள் ஜீவகாருண்யம் காரணமாக மதமாற்றம் செய்யப்படுகிறார்கள். அதாவது போரினால் கைவிடப் படும் குழந்தைகளின் அழுகுர லுக்கு இரங்கும் பௌத்தமத குருமார்கள் எமது குழந்தை களுக்கு உணவு, உடை கொடுப்ப தோடு, அவர்களின் மொழியையும், பௌத்த மதத்தையும் போதிக்கி றார்கள். இது ஜீவகாருண்யம் காரணமாக நடைபெறும் மதமாற் றம்.

மனிதனுக்கு வரும் நோய்கள் எல்லாவற்றிலும் கொடிய நோய் பசிநோய், இறைவனுக்கு பசிப்பிணி மருத்துவன் என்றும் ஒரு பெயர் உண்டு. இறைவனை வணங்கி னால் இப்பிறப்பில் உணவும், உடையும் பெற்று துன்பம் நீங்கலாம் என்பதை

**இம்மையே தரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடர் கெடலுமாம்**

இந்த தேவார அடிகள் எமக்குக் கூறுகின்றன்.

எனவே ஈழத்தில் அனாதைகளாக தெருவில் நிற்கும் குழந்தை களுக்கு நாம் உணவும், உடையும் கொடுப்போமேயானால் அவர்கள் சிங்களவர்களாகவும், பௌத்தர்க ளாகவும் மாறுவதை தடுக்கலாம் அதுமட்டுமல்ல, வருங்காலத்தில் அக்குழந்தைகள் தான் தமிழனாகப் பிறந்ததிற்கு வெட்கப்பட வேண்டிய நிலையும் வராது.

இலண்டனிலுள்ள அறநிலையங் களில் சைவமுன்னேற்றச் சங்கத்தார் முன்னின்று கோயில்கள்மூலம் நம் அனாதைக் குழந்தைகளுக்குப் பணம் சென்றடைய வழிசெய்ய வேண்டும். இது அவர்களின் முக்கிய கடமையாகும். ஒவ் வொரு கோயிலும் தங்களுக்கு வரும் பணத்தின் மிச்சத்தின் ஒரு பங்கை, மாதம் தோறும் அனா தைக் குழந்தைகட்குக் கொடுக்க வேண்டும்.

இலண்டன் உயர்வாசற்குன்று முரு கன் ஆலயத்தார் பத்தாயிரம் பவுண்களை அனாதைக் குழந் தைகள் அறக்கட்டளைக்கு அளித்தி ருக்கிறார்கள். விம்பிள்டன் பிள்ளை யார் கோவில் நிர்வாகத்தாரும் மாதந்தோறும் ஆயிரத்து ஐந்நூறு பவுண்களை கொடுக்கிறார்கள். இது பாராட்டப்பட வேண்டிய விடயம். இலண்டன் முத்துமாரியம்மன் ஆல யத்தினரும் ஆயிரத்து ஐந்நூறு பவுண்களை அனாதைக் குழந்தை களுக்கு அளித்துள்ளனர்.

இவர்களைப் போல் இலண்டனில் உள்ள ஆலயங்கள் யாவும் மாதந்தோறும் அனாதைக் குழந் தைகள் அறக்கட்டளைக்கு காசு கொடுப்பார்களானால் சைவத்தமிழ்க் குழந்தைகள் தமிழர்களாக, சைவர் களாக, தன் இனப்பற்று உள் ளவர்களாக வளர்வார்கள்

**வாழ்வாவது மாயம் இது**
**மண்ணாவது திண்ணம்**
பாழ்போவது பிறவிக்கடல்
பசிநோய் செய்த பறிதான்
தாழாது அறஞ் செய்மின்

இது சுந்தரர் தேவாரம். ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் எப்ப என்ன நடக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் இந்த உடல் மண்ணோடு

மண்ணாகப் போவது மட்டும் முடிந்த முடிவாக எல்லோருக்கும் பொதுவாக இருக் கின்றது. பிறவிக் கடலினுள் அமிழ்ந்து இந்த வாழ்நாள் அழிந்து வீண்போகும் முன்னர் தர்மம் செய்யுங்கள். பொது மக்கள் தெய்வத்திற்கு செய்த, செய்கின்ற, செய்யும் தர்மம் கோயில் உண்டியலில் தேங்கி நிற்க வேண்டாம்.

ஈழத்து அனாதைச் சிறுவர்களின் பசி நோயை தீர்க்க அது உதவுமா? **இலண்டன் கோயில்களின் அறக்கா வலர்கள் இப்போதே அறம் செய்வார்களா?**

**–சாலினி–**

ஆசிரியர் கலசம்,

நேற்றுபோல் இருக்கின்றது கலசம் எனும் ஆன்மீக இதழ் வெளியானது. ஆடம்பரமே இல்லாமல் அமைதியாகவும் அதே நேரத்தில் ஆக்கபூர்வமாகவும் மனத்திற்கு ஆன்மீக நிறைவைத் தரும் பூரணத்துவ இதழாக இன்றுவரை கலசம் நிமிர்ந்து நடைபோட்டுக் கொண்டிருப்பதை காணும்போது அகமும் உகமும் மிக மகிழ்ந்து கலசத்தை ஆக்கிகொண்டிருக்கும் ஆசிரிய, நிருவாக, குழுவினர்க்கு ஆசிகள் கூறுவது எமது முதற்பணி. எமக்கு கலசம் சற்று தாமதமாகவே கிடைக்கப் பெறினும், ஆசிரிய தலையங்கமும் மற்றும் ஆக்கங் களும் ஆவலோடு உற்று நோக்க வைக்கின்றன. சில ஆக்கங்கள் கருத்து பரிமாற்றம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளி விடுகின்றன. அந்த வகையில் கலசம் பத்திரிகா தர்மத்திற்கு ஏற்ப சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அனி! என்ற குறளுக்கு ஏற்புடையதாய் தன்னை சமனாக செய்து கொண்டு பொருளை சீர்தூக்கி காட்டும் தூலக்கோல் போல் அமைந்து ஒரு பக்கம் சாயாது சான்றோராய் விளங்குகிறது. சரி இனி விடயத்திற்கு வருவோம். கலசம் ஆடி, ஆவணி, புரட்டாதி–1998 இதழில் வருங்கால சமுதாயமும் வழிபாட்டு முறைகளும் எனும் தலைப்பிலான ஒரு கட்டுரையை டாக்டர். இரத்தினம் நித்தியானந்தம் அவர்கள் எழுதியிருந்தார்கள். ஆதியும் அந்தமும் இல்லாத அற்புத சமயத்தை புலம் பெயர்ந்து வாழும் இளம் சந்ததியினர்க்காக ஆகம புராண இதிகாசங்களை–யெல்லாம் தலைகீழாக புரட்டி அவரவர் வசதிற்கு ஏற்ப மாற்றியமைக்கும் அற்புத வழி–களை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் மிக அற்புதமாக கேள்விகுறிகளோடு கட்டுரையை புனைந்திருந்தார். வேற்று நாட்டு சூழலில் வேற்றுமொழியில் வேற்று சமய கலாசாரத்தில் வாழும் இளம் சந்ததியினர்க்கு எமது கலை, கலாச்சார, சமய, மொழி என்பன போதிப்பது சற்று கடினமான காரியமே என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டியகாலகட்டம் 80களில் எனலாம். 1990ம் ஆண் டிலிருந்து ஐரோப்பிய நாடுகள் எதை எடுத்துக் கொண்டாலும், ஆலயங்கள், கலாச்சார மன்றங்கள், மொழி வகுப்புகள், இசை வகுப்புகள், என போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இப்படியான நிலையில் தாய், தந்தையர்கள் எடுக்கும் முயற்சி சிறப்பானதாக இருக்குமாயின் எந்தஒரு நிலையிலும் சமய அடையாளம், சமயகாப்பு, நின்று நிலைக்கும் என்பதை திட்டவட்டமாக கூற முடியும்.

பெரியோர் காட்டும் வழியே சிறியோரை வாழவைக்கும். எந்த ஒரு இனத்தையோ மதத்தையோ எடுத்துக் கொண்டாலும் தனது மதச்சின்னம், மொழி, கலாச்சார உடை என்பதை எந்த நாட்டிலும் விடாது மேற்கொண்டுதான் வரு கின்றார்கள். உதாரணமாக ஒரு சீக்கிய இனத்தவரை பார்த்தால் எந்த நாட்டில் இருந்தாலும் தனது குடுமி, தாடி, தலப்பாகை இவற்றை மாற்றமாட்டார்கள். அதேபோல் முஸ்லிம் இனத்தை சார்ந்தவர்கள் தொப்பி, தாடி, போன்ற ஏதேனும் ஒன்றை சமயசின்னமாக்கி தம்மோடு காட்டிநிற்பர். கிறிஸ்த்தவரை நோக்கினால் சிலுவை அணிந் திருப்பர். ஆனால் எம்மினத்தவரோ ஆலயங்களுக்கு கூட வேட்டி, சேலை, அணிந்து வர அச்சப்படுகின்றனர். நெற்றியில் திருநீறு, பொட்டு, அணிய அச்சப்படுகின்றனர். தமது மொழி எனப் போற்றும் தமிழை பேசுவதே அநாகரிமாக நினைக்கின்றார்கள். அனால் தமிழில் வழிபாடு அரச்சனை செய்ய வேண்டும் என புதுவிதமான வியாக்ஞானம் செய்கின்றார்கள். இவர்களை என்ன வென்று சொல்வது?

உனக்கல்ல உபதேசம் ஊருக் குத்தான் என்பது போல்தான் இங்கு நடப்பவைகளும் மொழி, சமய பற்று உள்ளவர்கள் அவ்வழி ஒழுகியே அதை மற்றவரக்கு புகட்ட வேண்டும். வேற்றுமதத்தவர்களே போற்றி வியக்கும் விடயங்கள் எம் சைவசமய நடை முறைகளாகும். ஓர் பௌத்த, கிறிஸ்த்தவ, முஸ்லிம்

மதத்திலே ஒரு திருடன், முறைகேடாய் நடப்பவன், யாரும் பின்பு புத்த பிக்குவாக, பாதிரியாராக, அல்ஹாஜ்சாக வர முடியும். ஆனால் எங்கள் சமயத்தில்தான் இறைவன் தொண்டு புரிய என தனி இனம் உண்டு: சிவவேதியர் எனபடும் பிராமணகுலம். ஆனால் கட்டுரையாளரோ தாம் ஏதோ நாயன்மார் காலத்தில் வாழ்ந்தவர் போல் தமிழே முன்பு பூஜை மொழியாக இருந்தது என்றும் யாவரும் கருவறை சென்று பூவும் நீரும் கொண்டு திருமேனி தீண்டிப் பூஜை செய்தார்கள் என்றும் புதிய புராண இதிகாசங்கள் உருவாக்கு கின்றார். அதன்படி செய்யவும் புலம் பெயர்ந்த ஆலயம் சார்ந்த நிர்வாகிகட்கு அன்புகட்டளை இடு கின்றார். இதை என்னவென்று சொல்ல. ஆரணத்தின் உட்பொருட்கள் அனைத் துமாகும்

அண்ணலை எண்ணிய காலம் முன்னும் அன்பின் காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர்

என்ற சேக்கிழார் கூற்று எங்கே?

ஆகமம் தாள் நின்று அன்னிப்பான் தாள் வாழ்க!

என்ற மாணிக்கவாசகர் கூற்று எங்கே?

வேதம் ஓதி வெண்ணுல் பூண்டு வெள்ளை எருதேறி

என்ற ஞானசம்பந்தர் கூற்று எங்கே? இப்படி சமயகுரவர் போற்றிய ஆகமம், வேதமந்திர சிறப்புகளை பொய்யாக்கி புதிய புராண இதிகாசம் செய்து மாற்றம் செய்ய நினைக்கும் கட்டுரையாளரின் சிறப்புத்தான் என்னே! அவருடைய சமய, தமிழ் பற்றை நினைத்து நாம் உள்ளம் பூரிக்கின்றோம்.

வெறும் அறிவியல் நூல்கள்கூட சமஸ்கிருதத்திலே உள்ளன. அவற்றை நாம் நோக்கும் போது இன்று ஆங்கிலம் எப்படி உலக மொழியானதோ அதேபோன்று முன்பு ஆரியமொழி இருந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது. புலம்பெயர்ந்த மக்களின் இளம் சந்ததியினர்க்காக கட்டுரையாளர் எடுக்கும் முயற்சி அவர்களை சமயத்தை விட்டே ஓடச்செய்யும் நிகழ்வாகத்தான் அமையும்

பெரும்பாலும் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஆலயங்களில் ஆலய குருவிற்கு உரிய நடைமுறை கொடுக்கப்படாது. கலசம் (ஆடி, ஆவணி, புரட்டாதி–1998) ஆசிரிய தலையங்கம் சுட்டிக்காட்டியது போல் பூசை செய்யும் அர்ச்சகர்கள் பணத்திற்கு வேலைசெய்யும் வேலையாட்களாக கருதப்ப டுகின்றனர். குருவை குரு வாக நிர்வாகிகள் நடாத்தும் நிலையில் இளம் சந்ததியினர்க்கு ஆலய சூழலில் சமய அறிவை புகட்டும் நிலை குருக்களே சிறப்பாக செய்வார் என்பது மெய்.


கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ள இன்னோருவிடயம் இந்துசமயம் என்ற வேதவழிப்பட்ட சமயத் துக்குள் பிராமணர்களுக்கு மட்டுமே தலைமையிடம் தரப்படுகிறது என்ப தாகும். எமது சமயத்தின் தத்துவார்த்தமான மெய்நின்ற கிரியா விடயங்களை கட்டுரையாளர் அறியவில்லை போலும். ஒரு மனிதன் பிறந்து இறக்கும் வரை அவனுக்குரிய கிரியை நெறி சடங்குகளில் எத்தனை விதமான தொழில் உடையோர் (பிறவி வேறுபாடு உடையோர், கட்டுரையார் கூற்று) சந்திக்கின்றனர். பிராமணன், வேளாளன், தட்சன், புலயன், இசைவேளான், நாவிதன், குயவன் என அடுக்கிக்கொண்டே போகலாம். இவை எல்லாம் எமது சைவச மயத்திற்கு கிடைத்த பெரு

மைக்குரிய பிறப்புகள், வேறு பாடுகள். இவர்கள் அனைவரு டைய செயற்பாட்டில்தான் சைவ சமயம் எனும் மாபெரும் சமயத்தை காண்கின்றோம் என்பதை கட்டுரை யாளர் உணரவேண்டும்.

அடுத்து எமது சமயத்தோடு மற்றய சமயங்களை, நடைமுறைகளை உதாரணம் காட்டுவது ஏற்புடை யதல்ல. எமது சமய தத்துவங் களில் இருப்பதே அங்கும் உண்டு. புதிதாகவோ பெரிதாகவோ அங்கு ஏதும் இல்லை. எனவே சமய, மொழி கலாச்சாரத்தை வளரும் சந்ததியினர்கு எடுத்தியம்ப பல வழிகள் உண்டு. அதை விடுத்து அர்த்தமற்ற விவாதங்கள் வைத்து எழுதுவது அறியாமையாகும். கலசம் வாசகர் என்ற முறையிலும் சைவசமயம் சார்ந்த குரு என்ற வகையிலும் சம்பந்தப்பட்டவர்க்கு தெரியப்படுத்தி அதே கலசம் இதழில் அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன என்ற திரு. க. உமாமகேஸ்வரனின் கட்டுரைக்கு பாராட்டையும் தெரிவித்து எனது கருத்தை நிறைவெய்துகின்றேன்.

சுபமஸ்து

**துன்னையூர் ராம்**
**தேவலோகேஸ்வரசர்மா**



# கோலாகலமாக நடந்த கலசவிழா

லண்டன் மாநகரிலே முதன் முதலாக இருநாட்கள் தொடர்ச் சியாக கலசவிழா நடைபெற்றது. முதல்நாள் கேற்றம் பாடசாலை மண்டபத்திலும், இரண்டாம் நாள் லண்டன் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்திலும் சிறப்புற நடந்தது கலசவிழா.

முதல்நாள் விழாவின் ஆரம்பத்தில் ஸ்ரீ மீனாட்சி நடனப் பள்ளியினரின் கலசாஞ்சலியுடன் விழா ஆரம்ப மானது. 25 சின்னஞ் சிறுமியரை அழகுற அலங்காரம் செய்வித்துப் புதிய பாணி யிலே அமைத திருந்த நடனம் பார்வையாளரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. அதன்பின் கலசம் சஞ்சிகையின் 25ஆவது மலர் வெளியீடு ஆரம் பமானது. கலச உதவி ஆசிரியர் க. ஜெகதீஸ்வரன் புத்தகத்தை அறிமுகம் செய்துவைத்தார். தொடர்ந்து புத்தகத்துக்கான மதிப்பு ரையை திரு நேமிநாதன் அவர்கள் செய்தார். கலசம் ஒரு புதிய திருப் புமுனையை அடைந்துள்ளது என்பதனைச் சுட்டிக்காட்டினார். கல சம் சமூகத்தோடு தன் சமயப் பார்வைதனை இணைக்கும் பணியில் வெற்றி கண்டுள்ளது என்பதனைத் தெளிவாகக் கூறினார். தொடர்ந்து வாழ்த்துரை கூறிய பத்திரிகையாளர் திரு ராஜகோபால் அவர்கள் பத்திரிகை விடுவதில் உள்ள கஸ்டநஸ்டங்களையும் துன்பங்களையும் கூறி 160






பக்கங்களில் கலசம் வெளிவந்த தனை மனந்திறந்து பாராட்டினார். அடுத்து ஆசியுரை வழங்க வந்த திரு நாகநாதசிவம் குருக்கள் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு ஆசி யுரையை விட்டு உணர்ச்சி உரை வழங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. புதிய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத உரையாக இவர் உரை அமைந்திருந்தது. அதன்பின் கலச ஆசிரியர் அமைதி யாகவும் அடக்கமாகவும் உணர்ச்சி வசப்படாமலும் கலசம் புத்தகத்தின் வளர்ச்சிப் படிமுறைகளைக் கூறி னார். தொடர்ந்து ஸ்ரீ மீனாட்சி

நடனப் பள்ளியினரின் நடனமும், குறோய்டன் நாடகக் குழுவினரின் பொண்ணு பார்க்க மாப்பிள்ளை வந்தார் நாடகமும் நடைபெற்று விழா இனிதே முடிவுற்றது மன துக்கு இதமாக இருந்தது. இரண் டாம் நாள் நிகழ்ச்சி திருமதி சுபத்திரா சாந்தீபன் அவர்களின் நடன நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து கலச வெளியீடு இடம்பெற்றது. இதன்போது திரு மதி தமிழரசி சிவபாதசுந்தரம் புத்தக அறிமுகம் செய்தார். திரு நடராசன் (இந்து உதவி ஆசிரியர்) அவர்கள் புத்தக மதிப்புரை செய்தார். சமயத்தை சமூகத்தோடு இணைக கும் எம்பார்வையை வர வேற்றுப் பேசினார்.

தொடர்ந்து பழையன கழித்தல் வேண்டுமா? வேண்டாமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடை-பெற்றது. இப்பட்டி மன்றத்துக்கு வித்துவான் வேலன் அவர்கள் தலைமை தாங்கினார். இப்பட்டி மன்றத்தில் பல அனுபவம்மிக்க அறிஞர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர். திரு ராஜமனோகரன் அவர்களின் பேச்சு ரசிக்கக் கூடியதாக இருந்ததென பல பார்வையாளர்கள் பேசிக் கொண் டனர்.

தொடர்ந்து துளிர்க்கட்டும் எனும் தலைப்பில் கவியரங்கம் நடை பெற்றது. இதன் தலைமைப் பொறுப்பை திரு சிறிக்கந்தராசா அவர்கள் ஏற்றிருந்தார். உணர்ச் சிகரமாகக் கவியரங்கம் நடை-பெற்றது. இந்நிகழ்ச்சியோடு விழா முடிவு பெற்றது. இப்படி இருநாட்கள் வெற்றிகரமாக ஒருவிழாவை நடத்தி முடித்த கலசம் குழுவினரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

**–பாரதிப்பித்தன்–**

# ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்







ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் கடந்த 5ஆம் திகதி பக்திப்பரவசத்துடன் இனிதே நடந்தது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். எங்கும் அரோகரா சத்தம் கேட்க பல சிவாசாரியர்கள் கூடிநின்று மந்திரங்கள் கூற அன்னைக்கு அழகாக குடமுழுக்கு நீராட்டு வைபவம் நடந்தேறியது. ஆலயம் மிக அழகாக அமைக்கபட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு ஸ்ரோன்லியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்று வாங்கப்பட்டு ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு ஆலயம் பொதுமக்களின் வழிபாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாவது விஸ்தரிப்புப் பணியாக கல்யாண மண்டபம், யோக பயிற்சி நிலையம், குருக்கள்மாருக்கான தங்குமிடவசதி ஆகியன அமைக்கப்பட்டு 1998ஆம் ஆண்டு பாவனைக்கு விடப்பட்டது.

மூன்றாவது இறுதியுமான பணியாக ஆலயவிஸ்தரிப்பாக திராவிடபாணி அமைப்புக்காக இந்திய சிற்பக்கலை வல்லுனர்களின் ஒத்துழைப்போடு கடந்த ஒருவருடகாலமாக அமைப்பு வேலைகள் நடந்து கடந்த 5ம் திகதி கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறியது.

இவ்வாலயத்தில் முருகன், சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன் ஆகிய ஆறுவகை வழிபாடுகளும் ஒருங்கே அமைந்துள்ளன.

இவ்வளவு சிறப்பும் பெற்ற அம்பாள் அடியார்களுக்கு அருள்புரிய அம்பாளை நாமும் வேண்டிக் கொள்கின்றோம்.

# பெண்கள் உலகம்

பெண் என்பவள் சக்தி. அவளின் அசைவுகள் நிறுத்தல்கள் உலகின் அசைவையும் நிறுத்தல்களையும் தீர்மானிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. இந்த உண்மையினைப் பக்கபலப்படுத்தும் சமய ஆதாரங்களை வெளிக்கொணர்வதும் அவற்றின்மூலமாகப் பெண்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நோக்கி நகர்வதும் இப்பகுதியின் நோக்காகும். இப்புதியினை எங்கள் சஞ்சிகையின் பெண்கள் பகுதிகுப் பொறுப்பான தமிழரசி சிவபாதசுந்தரமவர்கள் தொகுத்து வழங்குவார். இது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களை அப்போடு வரவேற்கின்றோம்.

## பாவையர் போற்றிய பாடல்கள்









சாலினி

சங்ககாலத்திற்கு முன்பு இருந்தே பெண்கள் பல விதமான தமது சமூகவாழ்வில் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் பாடல்களை இசையுடன் அமைக்கும் முறையையும் அறிந்திருக்கிறார்கள். இவ்வாறு பாவையர் போற்றிய பாடல் களை சங்கமகளிர் போற்றிய பாடல் கள் என்றும் கடந்தகால மகளிர் போற்றிய பாடல்கள் என்றும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் விளக் கம் தரப்படும்.

**அ.** சங்ககால மகளிர் போற்றிய பாடல் இது அக வன் மகளிர் பாடல், விற்களப்பாடல், துணங்கைப் பாடல், வெறியாட்டப்பாடல், விறலியர் பாடல், இணைமகள் பாடல், தமிழிஞ்சிப் பாடல் என நீண்டு கொண்டு போகும்.

### அகவன் மகளிர் பாடல்

குறி சொல்லிப் பாடும் பெண்களே அகவன் மகளிர் பாடல் எனப்படும்.

**வெண் கடைச் சிறு கோல் அகவன் மகளிர் மடப்பிடி பரிசில் மான**
**(குறுந்தொகை 298)**

என பரணர் அகவன் மகளிர் பாடி பரிசு பெற்றதைக் குறிப்பிடுகின்றார் இச் சிறு கோலை கையில் வைத்தி ருப்பதாக இவர் சுட்டுவதால் குறி கூறி பாடும் பெண்களே என் பது தெளிவாகின்றது. குறி கூறி பாடி பெண்யானை பரிசாகப் பெறும் அளவிற்கு அவர்கள் பாடலும் குறியும் சிறப்புடையதாக இருந்திருக் கின்றது. அக வன் மகளிர் தெய்வங் களை அழைத்து குறி கூறத் துணையாக நாவில் இருந்து அருளுமாறு வேண்டிப் பாடி இருக்கி றார்கள். இன்றும் திருச் செந்தூர் குற்றாலம் போன்ற இடங்களில் உள்ள குறிகூறும் பெண்கள் இறையருளை வேண்டிப் பாடி குறி கூறுவதைக் காணலாம்.

அகவன் மகள் ஒருத்திதான் குறி பார்க்கும் பெண்ணின் காதலனின் (தலைவன்) மலைநாட்டைப் புகழ் ந்து பாடுகின்றாள் . அதனைக் கேட்ட காதலி அகவன் மகளே! அந்த பாட்டை பாடு, இன்னும் பாடு என்று கேட்கின்றாள். இதனை ஔவையார்

**அகவன் மகளே பாடுகபாட்டே**
**இன்னும் பாடுக பாட்டேயவர்**
**நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே**
(குறுந்தொகை 23)

இதிலிருந்து அகவன் மகளிர் பாடலின் சிறப்பு இனிது விளங்கும்.

### ஆ. கடந்த கால மகளிர் போற்றிய பாடல்

இது ஆரத்திப்பாடல், ஊஞ்சல் பாடல், கும்மிப்பாடல், குறத்திப் பாடல், தெம்மாங்கு, காவடிச்சிந்து, தாலாட்டு, கரகாட்டப்பாடல், வேல வன் பாடல், கோலாட்டுப்பாடல் என

இப்பாடற்றொகுதியும் நீண்டதே. இப்பாடல்களில் ஒன்று இப்பகுதியில் வெளிவரும்.

**ஆரத்திப்பாடல்**

மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும்போது ஆரத்தி எடுத்து பாடல்பாடும் வழக்கம் இன்றும் இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறுகின்றது. மஞ்சள் குங்குமத்தை கரைத்து அத்தட்டில் மங்கல விளக்கேற்றி வைத்து மணமக்களுக்கு ஆரத்தி சுற்றிப்பாடும் பாடல் ஒன்றை இங்கு படித்து இரசியுங்கள்.

**ஆலாத்தி ஆலாத்தி ஐந்நூறு ஆலாத்தி**
**முத்தாலே ஆலாத்தி முன்னூறு ஆலாத்தி**
**பாக்காலே ஆலாத்தி பலநூறு ஆலாத்தி**
**வெத்திலையால் ஆலாத்தி வெகுநூறு ஆலாத்தி**
**குங்குமத்தால் ஆலாத்தி கோடிகோடி ஆலாத்தி**
**மஞ்சளால் ஆலாத்தி மங்கலமாய் ஆலாத்தி**

ஆரத்தி எடுப்பவர் இருவரும் மனநிறைவுடன் இணைந்து பாடும்போது இப்பாடலின் சுவை நன்கு புலப்படும்.

★

வாசகர்களே! பெண்கள் சம்பந்தமான கட்டுரைகளை உங்களிடமிருந்து வரவேற்கின்றோம்!. பெண்களுடைய பிரச்சினைகளைச் சமூக சமுதாயக் கண்கொண்டு பார்த்து எழுதுங்கள்.

# சமையற்கலைப் புத்தகம்

இலங்கையின் மாந்தை நகரின் அரசனான நல்லியக் கோடனிடம் சென்ற பாணனுக்கு அவனின் அழுக்கடைந்த ஆடையைக் களைந்து புது ஆடை அணிவித்து பொன்தட்டில் உணவு பரிமாறப் படுகின்றது.

வகை வகையாக உணவுகள் பரிமாறுகிறார்கள். அந்த உணவுகள் அருச்சுனனின் அண்ணனான வீமன் எழுதிய சமையற்கலைப் புத்தகத்தில் சொல்லப்பட்ட முறை யில் இருந்து மாறாது சமைக்கப் பெற்றனவாம்.

பாணர் உண்டு மகிழ்ந்தார் எனக்கூறும் சிறுபாணாற்றுப்படை வீமனின் மடைநூல் பற்றிய செய்தியையும் சொல்கின்றது. ஆயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன் ஈழத்தமிழரும் சமையற் கலைப் புத்தகம் பாவித்தி ருக்கிறார்கள் என்பது இதனால் அறியப்படுகின்றது.

(சிறுபாணாற்றுப்படை 235–245)

# ஓம் சக்தி

## -பாரதியார்-

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர், சக்தி

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப் பாள்
அல்லது நீங்கும் என்றே யுலகேழும்
அறைந்திடுவாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத்தம ரர்க்கிணை யாக்கிடும்
ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்

P.S. Ragu

# WELCOM CENTRE

## STAR MUSIC

தரமான ஒலி ஒளிகள்

**FOREVER AND EVER GOOD QUALITY**

**OPEN 7 DAYS A WEEK 11.00AM-11.00PM**





திரை, இசை நட்சத்திரங்களின் புதிய-பழைய திரைப்படப் பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, ஓடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759**

**209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH**

**TEL: 0181 472 6084**

**247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ**

KUMARANS


# குமரன்ஸ்

உங்களுக்குஅன்றாடம் தேவையான லீலா
தயாரிப்புகளை மொத்த விற்பனை
விலைக்கு தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# KUMARANS




சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைப்பு செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14. 04. 99 அன்று வெளியிடப்பட்டது.